# விடுதலைப்புலிகள்

குரல்: 58 ஆனி - 1995 அன்பளிப்பு: ரூபா 5/-

## உள்ளே

* படைபலத்திற்கான ஆட்சேர்ப்பு - விளக்கம்
* உளவாளிகளை இனங்காணுங்கள் - வேண்டுகோள்
* பதவியா சிங்களக் குடியேற்றத் திட்டம் - நிலப்பதிப்பு
* நுணுக்குக்காட்டி
* தலைவரின் அசையாத உறுதி! - வரலாறு
* இந்திய அரசியல்: புதிய அத்தியாயம் - உசாவல்
* அரசில் இணைந்த தமிழ்த் துரோகிகள்

# சர்வதேச ரீதியில் தமிழரின் பேரணிகள்; உலகளாவிய தமிழினம் புலிகளுக்குப் பேராதரவு!




**புலிகள் இயக்கத்திற்கு எதிராக சந்திரிகா அரசு மேற்கொண்டுவரும் சர்வதேசப் பிரச்சாரத்திற்குப் பதிலடி கொடுப்பது போல, உலகத் தமிழர்கள் புலிகள் இயக்கத்திற்கு ஆதரவு தெரிவித்து - மாபெரும் பேரணிகளை நடாத்திவருகின்றனர். உலக நாடுகளின் தலைநகரங்களில் நடந்துவரும் இந்த ஆதரவுப் பேரணிகளில் தமிழர்கள் ஒன்றுதிரண்ட செய்தி, சிங்கள அரசிற்கு அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. அதேவேளை, சர்வதேச சமூகமும் உண்மைநிலையை உணர்ந்துகொள்ள அது ஏதுவாக அமையலாம்.**

பதவி ஏற்ற காலம் முதலே தமிழீழ விடுதலைப் போராட்டத்தை ஒடுக்குவதற்காக சந்திரிகா அம்மையார். ஒரு அரசியல் - இராணுவத் திட்டத்தைத் தயாரித்து வைத்திருந்தார். அரசியல் ரீதியாக புலிகளை அந்நியப்படுத்தி, பின்னர் இராணுவ பலத்தைப் பயன்படுத்தி அவர்களை அழித்து விடுதலைப் போராட்டத்தை ஒடுக்குவதே, அந்தத் திட்டம். இத்திட்டத்தின் முதற் பகுதியை நிறைவேற்றுவதற்குரிய ஒரு தந்திரோபாயமாகவே, "பேச்சுவார்த்தை" என்ற நாடகத்தை சந்திரிகா அரசு அரங்கேற்றியது. பேச்சுவார்த்தையை புலிகள் இயக்கம் முறித்துக்கொள்ளும் சூழலை ஏற்படுத்தி, அதன்மூலம் பேச்சு முறிந்ததும், அந்தச் சூழலைப் பயன்படுத்தி சர்வதேச ரீதியாகப் புலிகளை ஓரங்கட்டலாம் என்று சந்திரிகா அரசு கணக்குப்போட்டது.

பேச்சுவார்த்தை முறிவடைந்ததும் பல மேலை நாடுகள் - விசயம் புரியாமல் - புலிகள் இயக்கத்தை அதற்காகக் கண்டித்தன; இந்தக் கண்டனங்கள் சந்திரிகா அரசை உற்சாகப்படுத்தின. சர்வதேசரீதியாக புலிகளை ஓரங்கட்டுவதற்கு இதுதான் தக்கதருணம் என்று கருதிய சந்திரிகா அரசு, தனது வெளிநாட்டமைச்சரை உலக நாடுகளுக்கு அனுப்பி, புலிகள் இயக்கத்திற்கு எதிராகப் பிரச்சாரத்தை மேற்கொண்டது. உலக நாடுகளிலுள்ள புலிகளின் அலுவலகங்களை மூடச்செய்து - அங்கே போராட்டத்திற்கு ஆதரவான நடவடிக்கைகளைத் தடுப்பதே, அந்தப் பிரச்சாரத்தின் நோக்கமாக இருந்தது ஆயினும் அந்தந்த நாடுகளின் சட்டங்களுக்கும் - சமூக வாழ்வுக்கும் எந்த ஒரு இடைஞ்சலும் இல்லாது புலிகள் இயக்கம் செயற்பட்டதால், சிங்கள அரசின் கோரிக்கைகள் எடுபடாமல் போய்விட்டன.

இதேவேளை, புலிகள் இயக்கத்திற்கெதிரான சந்திரிகா அரசின் பிரச்சாரப் போரை, வெளிநாடுகளில் வதியும் தமிழர்கள் பிசுபிசுக்கச் செய்துவிட்டனர். மேலைத்தேய நாடுகளின் பெரும்பாலான நகரங்களில் திரண்ட ஈழத்தமிழர்கள், புலிகள் இயக்கத்திற்கு ஆதரவான பேரணிகளை நடாத்தியதுடன் - புலிகள் இயக்கத்தையும் விடுதலைப் போராட்டத்தையும் உலக நாடுகள் அங்கீகரிக்கவேண்டும் என்ற கோரிக்கைகளையும் எழுப்பினர். இந்தவகையில் - சிங்கள அரசு எமது போராட்டத்திற்குக் கொடுக்க முனைந்த ஒருவகை நெருக்கடியை, புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் ஒன்றிணைந்து போராட்ட ஆதரவுப் பேரணிகளை நடாத்தி, தமது கடமையை நிறைவேற்றி உள்ளனர்.

இங்கிலாந்து, ஜேர்மனி, டென்மார்க், நோர்வே, பிரான்ஸ் சுவிற்சர்லாந்து, அவுஸ்திரேலியா, கனடா, சுவீடன், அமெரிக்கா ஆகிய நாடுகளில் வதியும் தமிழர்கள் போராட்டத்திற்கு ஆதரவாகவும் - புலிகள் இயக்கத்திற்கு அனுசரணையாகவும் நடாத்திய ஆதரவுப் பேரணி

→

# எதிரிகளைவிட துரோகிகளே ஆபத்தானவர்கள்!

தமிழ் இனத்தின் அரசியல் அபிலாசைகளுக்கு எதிரான பிரச்சாரத்திற்கு, 'தமிழ் முகத்தை உடைய' உதிரிகளைப் பயன்படுத்தும் தந்திரத்தை. சிங்கள அரசாங்கங்கள் நீண்ட காலமாகவே செய்து வருகின்றன. சிங்களப் பேரினவாத பூதத்திற்குச் சேவை செய்யத் தயாராக இருக்கும் இக்கோடரிக் காம்புகளுக்கு, அமைச்சர் பட்டங்களைக் கொடுத்தும், பிரமுகர் அந்தஸ்துக்களை வழங்கியும் - சிங்கள அரசுகள் - இவர்களை எமது போராட்டத்திற்கு எதிரான ஒரு பிரச்சாரப் படையாக மாற்றிவைத்திருக்கின்றன.

தமிழரின் விடுதலைப்போராட்டத்திற்கு எதிரான கருத்துக்களை சிங்கள இனத்தைச்சேர்ந்த ஒருவரைக்கொண்டுசொல்லுவிப்பதை விட, தமிழ் இனத்தைச் சேர்ந்த ஒருவரைக்கொண்டு சொல்லுவிப்பது - சர்வதேச சமூகத்தின் மத்தியில் - நல்ல பயனைக் கொடுக்கும் என்ற நயவஞ்சக நோக்குடன், சிங்கள அரசுகள் இவ்விதம் செயற்படுகின்றன. இதன்மூலம் பேரினவாத சக்திகள் பாரிய நன்மைகளைப் பெற்றுக்கொள்ள முற்படுகின்றன. அதாவது தமிழர்களே தமிழினத்தின் விடுதலைப் போராட்டத்தை ஏற்கவில்லை - அதை எதிர்க்கின்றார்கள் என்ற கருத்தை உலக நாடுகளில் பரப்பி, எமது விடுதலைப் போராட்டத்திற்கு இருக்கும் 'அரசியல் வீரியத்தை' அல்லது தார்மீக பலத்தைக் குறைக்க சிங்கள அரசுகள் முயற்சிக்கின்றன. அத்துடன், 'தமிழ் இனத்தை நாங்கள் ஒடுக்கவில்லை; அவர்களுக்கும் எமது அரசாங்கத்தில் அங்கத்துவம் வழங்கி - உரிய வகையில் அந்தஸ்துக்களையும், கௌரவங்களையும் கொடுக்கின்றோம்' என்ற கருத்தை உலக சமூகத்திற்கு வழங்கும் ஒரு வாய்ப்பாகவும் அதைப் பயன்படுத்துகின்றனர்.

தன்னலங்கருதியும் பணம், மற்றும் புகழுக்கு ஆசைப்பட்டும் சில "தமிழ்" பிரமுகர்கள் சிங்களப் பேரினவாதிகளின் இந்தச் சூழ்ச்சிகர அரசியலுக்குப் பலியாகி - தமிழினத்திற்குத் துரோகமிழைத்து வருகின்றனர்.

இத்தகைய கோடரிக் காம்புகளின் தமிழ்த் தேசிய விரோதக் கருத்துக்களுக்கு கொழும்புப் பத்திரிகைகள் மிக முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரித்து வருகின்றன. இதேவேளை, இத்தகைய "தமிழ்" பிரமுகர்களுக்கு வெளிநாட்டுச் சுற்றுலா மேற்கொள்ளுவதற்கான சந்தர்ப்பங்களைக் கொடுத்து - எமது போராட்டத்திற்கு எதிரான பிரச்சார வேலைகளில் ஈடுபடும்படியும் தற்போதைய அரசு பணித்து வருகின்றது.

கொழும்பில் இருந்தபடி "சமாதானக் குழு" என்ற போர்வையில் பேரினவாதிகளுக்கு வக்காலத்து வாங்கும் ஒரு அமைப்பின் தலைவரான **மோகனரஞ்சன்** என்ற "தமிழ்" பிரமுகர், சமாதானம் வேண்டி

தமிழீழ விடுதலைப் புலிகள்

Liberation Tigers Of TAMIL EELAM

புலிகளின் குரல்

ஐரோப்பியப் பயணம் மேற்கொண்ட போது, 'பி.பி.சி. தமிழோசை' அவரைச் செவ்வி கண்டது (20. 06. 1995). புலிகள் இயக்கத்துக்கு எதிரான விசமத்தனமான கருத்துக்களையும், தமிழரின் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தும் வகையிலும் கருத்துக்களைக் கக்கிக்கொண்டிருந்த இந்தக் கோடரிக் காம்பிடம், யாழ்ப்பாண நிலைமை பற்றி செய்தியாளர் கேட்ட போது, "முன்னர் சிங்கள இராணுவம் நின்றது; இப்போது தமிழ் இராணுவம் நிற்கின்றது" என்று விசமத்தனமான முறையில் பதில்கூறி, தனது பேரினவாத விசுவாசத்தையும்-தமிழ்த்தேசிய விரோதத்தையும் காட்டியிருந்தார்.

"புலிகளிடம் இராணுவ பலம் இல்லாவிட்டால் தமிழினத்தின் தனித்துவமே அழிக்கப்பட்டுவிடும்" என்று, புலிகளுக்கு எதிரான சில சக்திகளே வெளிப்படையாகக் கருத்துத் தெரிவிக்கும்போது, மோகனரஞ்சன் என்ற இந்தப் பேரினவாதஅடிவருடி, தமிழரின்விடுதலைப்போரையும் தமிழரின் விடுதலைச் சேனையையும் கொச்சைப்படுத்த முயன்ற விதத்தைத் தமிழினம் தெரிந்தேவைத்துள்ளது.

இதேபோல, **யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மனித உரிமைகளுக்கான ஆசிரியர் சங்கம்** என்ற ஒரு பெயரைத் தமக்குத் தாமே சூட்டிக்கொண்டு—கொழும்பில் இருந்தபடி- இயங்கிவரும் சில கோடரிக் காம்புகள், எமது விடுதலைப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தியேதீருவது என்று கங்கணங்கட்டிச் செயற்பட்டுவருகின்றன. **அவ்விதமான பெயருடைய ஒரு அமைப்பு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இல்லை** என்று, 'யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம்' உத்தியோகபூர்வ அறிக்கைகள் பலவற்றை விடுத்த நிலையிலும் - சில தமிழ்த் தேசிய விரோதிகள் - அந்தப் பெயரைப் பயன்படுத்தி, தொடர்ந்தும் போராட்ட விரோதப் பிரச்சாரத்தில் ஈடுபட்டு, அதன்மூலம் பேரினவாதிகளின் செல்லப்பிள்ளைகளாக மாறி உல்லாச வாழ்வு வாழ்ந்துவருகின்றனர்.

இத்துடன், சிங்கள இராணுவத்துடன் கைகோத்தபடி தமிழ் இன அழிப்பில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் சில தமிழ்க் குழுக்கள் - "தமிழ்த் தொகுதிகளுக்கான பிரதிநிதிகள்" என்ற மகுடத்துடன், சிறீலங்கா நாடாளுமன்றிலும் அங்கம் வகித்து.சிங்களப் பேரினவாதிகளுக்குச் சேவை செய்துகொண்டிருக்கின்றனர்.

இதேபோல, தேர்தலிலேயே பங்குபற்றாது நின்ற ஒரு உதிரித் தமிழனை அழைத்து, வெளிவிவகார அமைச்சர் என்ற பொறுப்பைக் கொடுத்து, தமிழரின் விடுதலைப் போராட்டத்திற்கு எதிராக சர்வதேசப் பிரச்சாரம் செய்யும்படி சந்திரிகா அரசு அனுப்பியது இனப்பற்று என்றால் கிலோ என்ன விலை என்று கேட்கும் அந்தக் கோடரிக்காம்பு, தமிழினத்தை விலைகூறி விற்றுத் திரிகின்றது.

தமிழராக இருந்தபடியும், தமிழ் மண்ணில் வாழ்ந்தபடியும் கல்விகற்று - அறிவுழைப்பினராக மாறிய இந்தத் தமிழர்கள், தமது அறிவை - அறிவுக் கூர்மையை தமிழினத்திற்கு எதிராகவே பயன்படுத்தும் அவல வரலாற்றை என்னவென்பது!

இரண்டகம் செய்தல் என்பது தமிழினத்திற்குக் கிடைத்த ஒரு சாபக் கேடோ எனச் சந்தேகிக்கும் அளவிற்கு, தமிழரின் அரசியல் வரலாற்றில் - ஆங்காங்கே - துரோகங்கள் நிறைந்து கிடக்கின்றன. எட்டப்பர்கள் - காக்கைவன்னியர்கள் என்ற வரிசைகள்போல் இப்போது - கதிர்காமர்கள், ராஜன் கூல்கள், மோகனரஞ்சன்கள், டக்ளஸ்தேவானந்தாக்கள்...... என்ற பெயர்களும் வரலாற்றில் பொறிக்கப்பட்டுவிட்டன. இந்த அற்ப மனிதர்கள் - சிலவேளை - இதையும் பெருமையாகவே எடுப்பார்கள்!

இன்று - இவர்களின் துரோகச் செயற்பாடுகளுக்குப் பரிசாக இவர்களைப் புகழ்ந்து பாடும் பேரினவாத சக்திகள் - நாளை - தமது தேவை முடிந்த பின், இவர்களைத் தூக்கி எறிந்துவிடுவார்கள். ஆயினும்,இந்த 'அற்ப மனிதர்கள்' வரலாற்றின் குப்பைத் தொட்டிக்குள்தான் கிடப்பார்கள்.

"எதிரிகளைவிட துரோகிகளே ஆபத்தானவர்கள்" என்று தலைவர் **பிரபாகரன்** கூறிய கருத்து ஒன்று. இந்த இடத்தில் நினைவுக்கு வருகின்றது. தமிழ் இனத்தின் எதிரிகள் தமிழர் போராட்டத்திற்கு ஏற்படுத்திய பாதிப்புக்களை விட, தமிழ் இனத்தைச் சேர்ந்த துரோகிகள், தமிழர் போராட்டத்திற்கும் தமிழ்த்தேசிய வளர்ச்சிக்கும் உண்டுபண்ணிய நாசங்கள் மிக மிக அதிகம். ○

## புலிகளுக்கு [illegible]…

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கு. அந்தந்த நாடுகளின் பத்திரிகைகள் - தொலைக்காட்சிகள் முக்கியத்துவம் கொடுத்துச் செய்தி வெளியிட்டிருந்தன. இதிலும் கனடாவின் 'ரொறன்ரோ'வில் நடந்த ஆதரவுப் பேரணியில் இருபதாயிரத்துக்கு மேற்பட்டோர் பங்குபற்றி இருந்தமை குறிப்பிடத்தக்கது. தலைவர் பிரபாகரனின் புகைப்படங்களைத் தாங்கியவாறு அணிவகுத்துச் சென்ற இந்த மக்கள் பேரணியில், கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் மற்றும் ஒன்ராறியோ மாநில சட்டசபை உறுப்பினர்களும் பிரசித்தி பெற்ற சில கனேடிய சட்டத்தரணிகளும் கலந்துகொண்டிருந்தனர். அன்று மாலை (17. 6. 95) இந்த மாபெரும் பேரணியை வர்ணித்த கனடாவின் 'றோமன் தொலைக்காட்சி நிறுவனம்' அதை, "ரொறன்ரோவின் வரலாற்றில் இதுவரை காணாத பெரிய ஊர்வலம்" என வர்ணித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

புலிகள் இயக்கத்திற்கு ஆதரவாக, வெளிநாடுகளில் வதியும் தமிழர்கள் மாபெரும் ஆதரவுப் பேரணிகளை நடாத்தியதால், சர்வதேசரீதியில் எமது விடுதலைப் போரின் நியாயத்தன்மை மீண்டும் ஒருமுறை உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனால் சந்திரிகா அரசின் பிரசாரம் சர்வதேச சமூகத்திடம் எடுபடாமல் போகும் சூழலும் எழுந்துள்ளது. இது சிங்கள அரசுக்குப் பலத்த ஏமாற்றத்தைக் கொடுத்திருக்கும் என்பதில் ஐயமில்லை. இதனால், போராட்டத்தை ஒடுக்க சந்திரிகா அம்மையார் வரைந்த நாசகாரத் திட்டத்தின் ஒரு பகுதி தோல்வி கண்டுவிட்டது என்று கூறலாம்.

இது ஒருபுறமிருக்க, தமிழ்நாட்டிலும் புலிகள் இயக்கத்திற்கு ஆதரவான உணர்வலை மீண்டும் எழுச்சியடையத் தொடங்கியுள்ளது. புலிகள் இயக்கம் தொடர்பான பாரிய அழுத்தங்களும் - பயமுறுத்தல்களும் அங்கே இருந்தபோதிலும், பெரும்பாலான தமிழ்நாட்டுக் கட்சிகள் ஒன்றிணைந்து, புலிகளுக்கு ஆதரவான உணர்வலைகளை மக்களிடத்தில் தோற்றுவிக்கும்வகையில்கூட்டங்களை நடாத்தியுள்ளன. 'யாழ். வான் பரப்பில்' வைத்து இரண்டு படைவிமானங்கள் சுட்டுவீழ்த்தப்பட்ட பின்னர், புலிகள் இயக்கத்திற்கான ஆதரவு தமிழகமெங்கும் மீண்டும் கிளம்பியுள்ளது எனக் கொழும்புச்செய்திகள் தெரிவித்தன. அத்துடன், புலிகள் இயக்கத்தைத் தனது பகைமைச் சக்தியாகப் பார்க்கும் இந்திய மத்திய அரசின் நிலைப்பாட்டிற்கு எதிராக தமிழ்நாட்டின் தலைவர்கள் பலர் கருத்துக் கூறியும் வருகின்றனர். தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்குப் பேராதரவு அளிக்கக்கூடிய நிலை தமிழகத்திலும் வளர்ந்து வருவதையே இது காட்டுகின்றது.

இந்தவகையில், 'மூன்றாம் ஈழப்போரில்' புலிகள் இயக்கம் பெற்றுவரும் இராணுவ மேலாண்மை, உலகத் தமிழர்களை உற்சாகப்படுத்தி - நம்பிக்கையூட்டி - வருகின்றது என்பது வெளிப்படை! O




"மக்கள் களம்" பகுதி, எமது மக்களின் ஐயங்களைத் தெளிவுபடுத்தும் நோக்கத்தோடு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. போராட்டம் தொடர்பாகவும், போராட்டச் செயற்பாடுகள் தொடர்பாகவும் உங்களுக்குள் எழும் ஐயப்பாடுகளை எமக்கு எழுதி அனுப்புங்கள்; "மக்கள் களம்" பகுதி அவற்றைத் தெளிவுபடுத்த முயலும். நீங்கள் அனுப்பவேண்டிய முகவரி கீழே உள்ளது.

'விடுதலைப் புலிகள்'
மையச் செயலகம்,
தமிழீழ விடுதலைப் புலிகளின்
வெளியீட்டுப் பிரிவு,
தமிழீழம்.

❋ உறையின் இடதுபக்க மேல் மூலையில், "மக்கள் களம்" என்று தயவு செய்து குறிப்பிடுங்கள்.

# போராட்டம் - ஒவ்வொரு தமிழனதும் கடமையே!

**பு**லிகள் இயக்கம் அண்மைக் காலமாகச் செய்துவரும் தீவிர ஆட்சேர்ப்பு நடவடிக்கை, மக்கள் மத்தியில் சில கேள்விகளை எழுப்பி உள்ளது.

பாடசாலைகளுக்கும் தனியார் கல்வி நிலையங்களுக்கும் சென்று மாணவர்கள் மத்தியில் ஆட்சேர்ப்புக் கூட்டம் நடாத்துவது சரியா? அது மாணவரின் கல்விக்கு குந்தகம் விளைவிக்கும் செயல் அல்லவா என்று, குரல் எழுப்புகின்றனர். அத்துடன், கட்டாயப் படுத்தி இயக்கத்திற்கு ஆட்கள் சேர்க்கப்படுகின்றார்கள் என்ற ஒரு கருத்தையும் சிலர் கொண்டிருக்கின்றனர். இவற்றிற்கு விடை அளிப்பதுதான் இம்முறை மக்கள் களத்தின் பணியாகும்.

இந்தக் கேள்விகளுக்கான விடையைத் தேடமுன்னர், தமிழீழ விடுதலைக்கான ஆயுதப் போராட்டம் ஆரம்பமாகியதன் தவிர்க்கமுடியாத வரலாற்றுத் தேவையை, எமது மக்கள் நன்கு விளங்கிக் கொள்ளவேண்டும்.

எமது இனத்தின் அரசியல் உரிமைகளுக்காக, முன்னைய தமிழ்த் தலைமைகள், ஏறக்குறைய கால் நூற்றாண்டுக்கும் மேலாக அகிம்சை வழியில் போராடினர் என்பதையும்; அந்த அகிம்சைப் போராட்டத்தை மாறிமாறி வந்த சிங்கள அரசாங்கங்கள் கருத்திலெடுக்காது விட்டதுடன், அந்த அமைதிவழி முயற்சியை ஆயுதங் கொண்டு நசுக்க முற்பட்டபோதுதான் - வேறுவழியின்றி - ஆயுதப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது என்பதையும், மக்கள் நினைவில் வைத்திருக்கவேண்டும்.

எனவே, எமது மக்களைப் பொறுத்தவரை, வரலாறு எமது இனத்திற்குத் தந்த தவிர்க்கமுடியாத ஒரு நிர்ப்பந்தமே ஆயுதப் போராட்டம் ஆகும். ஆயினும், தமிழர் தொடுத்த ஆயுதப் போரின் வளர்ச்சியைக்கண்டு அதிர்ந்த சிங்கள அரசாங்கங்கள், காலத்திற்குக் காலம், பேச்சுவார்த்தைகள் என்ற பெயரில் நடாத்திய அரசியல் திருவிளையாடல்களையும் எமது மக்கள் மனதில் வைத்திருக்கவேண்டும். அமைதித் தேவதையாகக் காட்சிதந்த சந்திரிகா அம்மையார், சமாதானப் பேச்சை எப்படி - எந்த நோக்கத்துடன் - நடாத்தினார் என்பது. இப்போது அம்பலமாகிவிட்ட ஒரு விடயம்.

எனவே, இந்த ஆயுதப் போராட்டத்தின்மூலமே நாம் எமது மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதுடன் - எமது இனத்தையும் முன்னேற்றப்பாதையில் வழிநடாத்திச் செல்ல முடியும். அப்படியாயின், 'இந்த ஆயுதப் போரில் எப்படி நாம் வெற்றியைப் பெறுவது?' என்ற கேள்வி இந்த இடத்தில் எழுகின்றது. படைபலம்தான் போரின் வெற்றியைத் தீர்மானிப்பதில் பெரும் பங்கு வகிக்கின்றது. படைபலம் என்று குறிப்பிடும்போது, போர் ஆயுதங்களையும் படை ஆட்களையும் சேர்த்தே குறிப்பிடுகின்றோம்.

இந்த இடத்தில் சிங்கள அரசின் படைபலத்தையும், தமிழர் சேனையின் படைபலத்தையும் சற்று ஒப்பிட்டுப் பார்ப்போம்.

சிங்கள அரசிடம் 10,000 ஆட்களையும், 85 விமானங்களையும் கொண்ட ஒரு நாசகார விமானப் படை இருக்கின்றது; அதேபோல 15,000 ஆட்களையும் 85 கடற்கலங்களையும் கொண்ட கொடூர குணமுடைய ஒரு கடற்படை அதனிடம் இருக்கின்றது. அத்துடன் விசேட படை, கொமாண்டோப் படை, அதிரடிப்படை என்று மொத்தம் ஒரு இலட்சம் ஆட்களையும் மற்றும் டாங்கிகள் - கவசவாகனங்கள் - பீரங்கிவகைகள் என்பவற்றையும் கொண்ட, ஒரு கொலைகாரத் தரைப்படையும் இருக்கின்றது. ஒட்டுமொத்தத்தில், ஒரு இலட்சத்து இருபத்தைந்தாயிரம் ஆட்பலத்தைக் கொண்ட ஒரு திரந்தரப்படை, சிங்கள அரசிடம் உண்டு. அத்துடன் ஊர்காவற்படை, துணைப் படை, பொலிஸ்படை என்று தேவை ஏற்படின் போர்க்களத்துக்கு அனுப்பப்படத் தயாராக மேலும் அறுபதாயிரம் ஆள் அணி சிங்களப் படையிடம் உண்டு.

இத்தகையதொரு இராட்சத பலத்துடன் இருக்கும் சிங்களப் படையுடன், ஒருசில ஆயிரம் போராளிகளுடன் - ஒப்பீட்டளவில் குறைந்தளவு ஆயுதங்களுடன் - இருக்கும் புலிபபடை மோத வேண்டி உள்ளது. இது முடியுமா? நிச்சயமாக முடியாது! அப்படியானால் என்ன செய்யலாம்! ஒரேயொரு வழிதான் உண்டு; அதாவது, எதிரியின் படை பலத்திற்கு நிகராக எமது படைபலத்தையும் அதிகரிப்பதுதான். இது முடியாத காரியம் அல்ல. சிங்களப் படைபலத்திற்கு நிகரான படைபலத்தைத் தமிழர் சேனைக்கு வழங்கக்கூடிய சக்தி, எமது இனத்திற்கு உண்டு.

தமிழீழத்தில் ஏறக்குறைய 18 இலட்சம் தமிழர்கள் வசிக்கின்றார்கள்; இதில் ஏறக்குறைய 8 இலட்சம்பேர் இளைஞர் - யுவதிகளாவர். இந்த இளைஞர் படையில் இருந்துதான் எந்த நாடும், தனது படைக்குத் தேவையான ஆட்பலத்தை எடுத்துக்கொள்வது வழமை. ஆனால், எமது மண்ணைப் பொறுத்தளவில், இந்த 8 இலட்சம் இளைஞர் திரளில் ஆக ஒருசில ஆயிரம் இளைஞர் - யுவதிகள்தான் புலிப்படையில் இணைந்துள்ளனர். மிகுதி ஏழு இலட்சத்துச் சொச்ச ஆட்பலம் தேசத்தின் பாதுகாப்பிற்குப் பயன்படாது கிடக்கின்றது. இந்த 8 இலட்சம் இளைஞர் சமுத்திரத்தில் இருந்து ஆகக்குறைந்தது ஒரு இலட்சம் இளைஞர் - யுவதிகள் இயக்கத்தில் சேர்ந்தால், தமிழரின் படைபலம் எப்படி இருக்கும் என்று கற்பனை செய்து பாருங்கள்; பெருமையில் மிதப்பீர்கள்!

இன்னும் ஒரு கோணத்தில் இருந்து இதைப் பார்ப்போம். இப்போது தமிழீழத்தில், ஏறக்குறைய 4 இலட்சம் குடும்பங்கள் இருக்கின்றன. குடும்பத்தில் ஒருவர், அதாவது, வீட்டிற் ஒருவர் என்ற வீதத்தில் புலிகள் இயக்கத்தில் இணைந்தால், 3 இலட்சம் பேர் கொண்ட ஒரு பாரிய படையாக புலிப்படை மாறிவிடுமே! சரி, அந்தளவுக்கு ஆசைப்படத் தேவையில்லை. 3 குடும்பங்களுக்கு ஒரு ஆள் என்ற வீதத்தில் இணைந்தாலே ஒரு இலட்சம் ஆட்பலம் தமிழர்படைக்கு வந்துவிடும். இவை எல்லாம் கற்பனைக் கணக்குகள் அல்ல; எமது தேசத்தின் மடியிலுள்ள பயன்படுத்தக்கூடிய சொத்துக்களின் கணக்கு. ஆனால், அது தேசத்தின் பாதுகாப்பிற்குப் பயன்படாமல் வீணே கிடக்கின்றது. இதற்கு உயிர் தொடர்பான அச்சமும் - ஆசையும் காரணிகளாக இருக்கலாம்.

இயக்கத்தில் இணைவோரின் உயிர்களுக்கு எந்தவித உத்தரவாதமும் இல்லை என்பது உண்மைதான். ஆனால், இன்றைய நிலையில், இயக்கத்தில் இணையாத மற்றையோரின் உயிர்களுக்கும் எந்தவித உத்தரவாதமும் இல்லை. ஒப்பீட்டளவில் சொல்லப் போனால் இயக்கத்தில் சேராத இளைஞர் - யுவதிகளிலும் பார்க்க, இயக்கத்தில் இருக்கும் இளைஞர் யுவதிகளின் உயிர்களுக்கு உத்தரவாதம் உண்டு என்று துணிந்து கூறலாம். ஏனெனில், 20 ஆண்டுகளுக்கும் மேலாக நடைபெறும் இந்த விடுதலைப் போரில், ஏறக்குறைய முப்பதினாயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் பலியாகி உள்ளனர்; ஆனால், இதில் போராடிச் சாவடைந்தவர்கள் ஏறக்குறைய ஆறாயிரம் மட்டுமே ஆகும்.

இயக்கத்தில் சேருவதற்கு இளைஞர்கள் பின்னடிப்பதற்குக் காரணம், அவர்கள் போராட்டத்தை வெறுக்கின்றார்கள் என்பதல்ல; அல்லது தமிழீழம் அமைவதை அவர்கள் விரும்பவில்லை என்பதும் அல்ல. அதற்கு உண்மையான காரணம் போர் தொடர்பான மிகைப்படுத்தப்பட்ட அச்சமும் - தயக்கமும், மற்றும் எதிர்காலம் சம்பந்தப்பட்ட தன்னல எதிர்பார்ப்பும்; போராட வேண்டிய தேவையை - அவசியத்தை அவர்களுக்குச் சரிவர உணர்த்தாமையும் ஆகும்.

பெரும்பாலான பெற்றோரும் மற்றும் குடும்பத்தின் மூத்தோரும் தமது பிள்ளைகளுக்கு அல்லது சகோதரங்களுக்கு போர் தொடர்பான அச்சத்தை ஊட்டி, அல்லது இயக்கத்தில் இணைந்தால் எதிர்கொள்ள வேண்டிய கஷ்டத்தைச் சொல்லி வெருட்டி, அவர்களைப் போராட்டத்தில் இணையவிடாது தடுக்க முயல்கின்றார்கள். அத்தோடு, தமிழரின் அவலநிலையை அவர்களுக்கு எடுத்துச்சொல்லி யதார்த்தத்தை அவர்களுக்குக் காட்டாமல் மறைப்பதுடன், சுயநல ஆசைகளை அவர்களது மனதில் விதைக்கவும் முயல்கின்றார்கள். இதனால், எமது இளம் சமூகத்தின் பெரும் பகுதியினர் உண்மை நிலையை உணராது இருளினுள் வைக்கப்பட்டுள்ளனர்.

ஆயினும், இந்த மண்ணின் இன்றைய நிலைபற்றி இந்த இளம் சமூகத்திற்கு விளக்கிக் கூறவேண்டிய வரலாற்றுக் கடமை, புலிகள் இயக்கத்திற்கு உண்டு. எமது இனம் சந்தித்து நிற்கும் அவல வாழ்வுபற்றி - எதிரிப் படைகளின் கொடூரமான அடக்குமுறை, அட்டூழியங்கள் பற்றி - அதில் இருந்து விடுபடுவதற்காக ஆயுதம் ஏந்த வேண்டிய அவசியம்பற்றி - எமது இளம் சமூகத்திற்கு விளக்கிச் சொல்ல வேண்டும். இந்தச் சரித்திரக் கடமையை நிறைவேற்ற ஒவ்வொரு கிராமம் கிராமமாக எமது போராளிகள் வரும்போது, பெரியவர்களின் தலையீடுகளால் அந்த இளம் சமூகத்தின் கணிசமான பகுதியை எம்மால் சந்திக்க முடியாமல் போகின்றது. அத்துடன், இந்த இளம் சமூகத்தின் கணிசமான பகுதி மாணவர் சமூகமாக விளங்குகின்றது. எனவேதான், இந்த இளம் சமூகம் சுதந்திரமாக ஒன்றுகூடும் இடங்களில் - பாடசாலை அல்லது தனியார் கல்வி நிலையங்கள் அல்லது பொது வீதிகளில் - அவர்களைச் சந்தித்து, இன்றைய யதார்த்தம் பற்றி எடுத்துச் சொல்லி, அவர்களுக்கு மறைக்கப்பட்ட மறுபக்கத்தைக் காட்டுவதுடன் அவர்களது தேசியக் கடமைபற்றியும் எமது கருத்துக்களைக் கூறுகின்றோம். எமது கருத்துக்களைச் செவிமடுத்து விழிப்படைந்த இளைஞர் - யுவதிகள் போராடவேண்டிய தேவையை உணர்ந்து இயக்கத்தில் இணைகின்றனர்; தேசியத் தேவைகருதி நாங்களும் அதை ஊக்குவிக்கின்றோம். இதுதான் உண்மை.

இதேவேளை, மாணவர்கள் மத்தியில் போர்க்காலக் கருத்தரங்குகள் நடாத்தப்படுவதையிட்டு, சிலர், இப்படியும் குற்றம் சுமத்துகின்றார்கள். அதாவது, பாடசாலைகளில், தனியார் கல்வி நிலையங்களில் போர்க்கால கருத்தரங்குகள் வைப்பது மாணவர்களின் கல்விக்குக் குந்தகம் விளைவிக்கின்றது என்கின்றனர். இது தவறான ஒரு குற்றச்சாட்டாகும். ஏனெனில், வாரத்திற்கு 25மணிநேரம் என்ற ரீதியில் மாதத்திற்கு 100 மணிநேரம் கொண்ட பாடசாலை நேரத்தில், ஆக சில மணி நேரத்தையே கருத்தரங்கிற்கு என நாம் எடுக்கின்றோம் (ஒவ்வொரு மாதமும் அவ்வாறு கருத்தரங்குகள் நடாத்தப்படுவதில்லை என்பதையும் கவனத்தில் எடுக்கவும்). இதுபோலவே, தனியார் கல்வி நிலையங்களிலும்.

இதேவேளை, மாணவர்களின் மத்தியில் போர்க்கால கருத்தரங்குகளை நடாத்துவதால் மாணவர்களின் மனநிலை பாதிக்கப்பட்டு, அவர்கள் படித்தலில் கவனம்

(9ஆம் பக்கம் பார்க்க)

# துவிச்சக்கரவண்டியிலிருந்து விமானம்வரை

# கைத்துப்பாக்கியிலிருந்து விமான எதிர்ப்புக் கருவிகள்வரை

**- விருதலைப் போரின் செல்நெறி**

★ ஆரம்பத்தில், தமிழ் மக்களுக்கு எதிரான சட்டங்களை இயற்றிய சிங்கள அரசு, சட்டங்களால் தமிழ் இனத்தை ஒடுக்கியது.

★ இத்தகைய சட்டங்களுக்கு எதிராக தமிழ் மக்கள் குரல் எழுப்பினர். சாத்வீக வழியில் சட்ட மறுப்புப் போராட்டம் செய்தனர்; ஆனால் சிங்கள அரசோ, மேலும்மேலும் தமிழருக்கு எதிரான சட்டங்களைப் பிறப்பித்துத் தமிழரை ஒடுக்கியது. தாம் இட்ட சட்டங்களை நிலைநாட்ட, சைக்கிள்களில் ஏறிய சிங்களப் பொலிஸ் படை, சட்டத்தை எதிர்த்த ஒருசில இளைஞர்களைத் தேடி அட்டகாசம் புரிந்தது.

★ துவிச்சக்கரவண்டிகளில் ஏறி வந்த பொலிசார் கைத் துப்பாக்கியாலும் உள்ளூர்த் தயாரிப்பு ஆயுதங்களாலும் தாக்கப்பட்டனர்; துவிச்சக்கரவண்டித் தேடுதல் தோற்றுப் போனது.

★ ஆக்ரோசம் அடைந்த பொலிசார், தனித்த ஒரு ஜீப்வண்டியில் ஏறி புலிவேட்டையில் ஈடுபட்டனர்; இந்த ஜீப்புக்களும் தாக்கப்பட்டன. தனித்த ஜீப் வண்டித் தேடுதலும் தோற்றுப் போனது. ஒருசில இளைஞர்கள் என்பது ஒருசில பத்து இளைஞர்களாக மாறியது.

★ இதைத் தொடர்ந்து தொடர் வாகனங்களில் தேடும் பணி தொடங்கியது. தொடர் வாகனங்களைக் கண்ணிவெடிகள் வரவேற்றன.

★ கண்ணிவெடித் தாக்குதலுக்குப் பாதுகாப்புத் தேட, தொடர்வண்டிகளுடன் 'பவல்' போன்ற கவசவாகனங்கள் இணைக்கப்பட்டன. பவலும் கண்ணியில் சிதற, தமிழீழத்தின் ஒரு பகுதியில் இராணுவ பவனிகளும் நிறுத்தப்பட்டன.

★ தேடிவரும் இராணுவத்தை, தேடி அழிக்கும் நிலைக்கு புலிகள் வளர்ந்தனர். இப்போது கடற்படையும் -விமானப்படையும் இராணுவத்துடன் இணைந்துகொண்டன. இதே வேளை ஒருசில பத்து இளைஞர்கள் ஒருசில நாறு இளைஞர்களாக வளர்ந்தனர்.

★ இப்போது கடல் ஒரு போர்க் களமாக மாறியது. இராணுவத்தின் விநியோக வழியாகவும்- புலிகளின் போக்குவரத்துப் பாதையாகவும் கடல் மாறியது. கடலில் இராணுவ அட்டகாசங்கள் அதிகரித்தன. மீனவர்களும் - போராளிகளும் பெரும் துன்பத்தைச் சந்தித்தனர். கடற்பரப்பில் சண்டை ஆரம்பமானது. கடற்படையின் தனித்த படகுகள் குறிவைக்கப்பட்டன. தனிப்படகுகள் ஓடி ஒளித்தன. தாக்குதல் படகுகள் 'வயர்லெஸ்' சாதனங்களுடன் வந்தன; அவையும் தாக்கப்பட்டன. பாரிய கப்பல்கள் துணைக்குப் போயின; அவையும் மூழ்கடிக்கப்பட்டன. இப்போது கப்பல்+படகுப் பவனி கடலில் நடக்கிறது.

★ தரையில் கட்டுப்பாட்டை இழந்த சிங்களப் படை, கடலால் கட்டுப்படுத்த முயன்று அதிலும் தோல்வி கண்டுவிட்டது. ஒருசில நூறு இளைஞர்கள் ஒருசில ஆயிரமாகப் பெருகினர்.

★ ஆகாயத்தில் ஏறி தரையையும் கடலையும் கட்டுப்படுத்த சிங்களப் படை முயன்றது; உலங்கு வானூர்திகள் - சிறுரக குண்டு வீச்சு விமானங்களில் ஏறி தமிழரை ஒடுக்க முயன்றது. இவையும் ஆங்காங்கே தாக்குதலுக்கு உள்ளாகின. பெரும் விமான அணிகள் வானில் அணிவகுத்தன. இராணுவமும் - கடற்படையும் விமானப்படையில் தங்கிநின்றன. இரண்டு 'அவ்ரோ' விமானங்கள் வீழ்த்தப்பட்டதும். சிங்களப் படை அமைத்த ஆகாயக் கோட்டைகள் சரிந்து விழுந்தன. ஒரு சில ஆயிரம் பல்லாயிரமாகியது.

★ இப்போது ஏவுகணை எதிர்ப்பு ஆயுதங்களை விமானங்களில் பொருத்தி - விமானப்படையை அதிநவீனப்படுத்தி - போராட்டத்தை அழிக்கச் சிங்கள அரசு முயல்கின்றது.

★ ஆனால், சிறீலங்கா அரசுக்கு இதுவரையும் ஒரு உண்மை புரியாமல் இருக்கின்றது. அதாவது, துவிச்சக்கர வண்டியில் சென்று போராட்ட விதைகளைக் கிளறி எறிய முயன்ற பொலிசார், பின்னர், ஜீப்பிற்கும் கனரக வாகன அணிகளுக்கும் மாறினர்; ஆனால் ஜீப்பாலோ பவல்களாலோ டாங்கிகளாலோ - கப்பல்களாலோ விமானங்களாலோ போராட்டத்தை ஒடுக்க முடியவில்லை; மாறாக பிரமாண்டமாக வளர்ந்துவிட்டது. இது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் உலகிற்கே தெரிகின்றது.

★ சைக்கிள்களில் ஏறி போராட்டத்தை ஒடுக்க முயன்ற சிங்களப் படை இப்போது, ஏவுகணை எதிர்ப்பு ஆயுதங்களைப் பூட்டிய விமானத்தில் ஏறி போராட்டத்தை ஒடுக்கப்போகின்றேன் என்று கர்ச்சனை செய்கின்றது.

அதேவேளை, ஒருசில இளைஞர்களுடன் தொடங்கிய விடுதலைப் போராட்டம் இன்று, பல்லாயிரக்கணக்கான போராளிகளைக் கொண்ட ஒரு விடுதலைச் சேனையாக வளர்ந்துள்ளது. கைத்துப்பாக்கியுடன் உள்ளூரில் செய்யப்பட்ட சாதாரண துப்பாக்கிகளைப் பிடித்திருந்த புலிவீரர்களின் கைகள் இன்று, விமான எதிர்ப்புக் கருவிகளைப் பிடிக்கும் அளவுக்கு வளர்ந்துவிட்டன.

சிங்களப் படைகளின் ஆயுத பலமும் ஆள்பலமும் அதிகரித்திருக்கின்றனதான். ஆயினும், அதனால் எமது போராட்டத்தை அழிக்கவும் முடியவில்லை; போராட்ட வளர்ச்சியைத் தடுக்கவும் முடியவில்லை. மாறாக போராட்டத்தை அது வளர்த்தே விட்டுள்ளது.

அரசாங்கம் இப்போது தேடிக்கொண்டிருக்கும் அதிநவீன ஆயுதங்களும், முன்னையவற்றைப் போல தோல்வியையே காணப்போகின்றன; நாளைய சம்பவங்கள் இதை நிரூபிக்கும்.

ஆழங்குறைந்த கடலுக்கு நீருந்து விசைப்படகே சிறந்தது; அதை வாங்கினால் புலிகளை வரவிடாமல் செய்யலாம் என்றது சிங்களக் கடற்படை. ஆனால், புலிகள் வராமலா விட்டார்கள்! வந்ததுடன் நின்றுவிடாமல், நீருந்து விசைப்படகுகளையும் அல்லவா பக்குவமாக எடுத்துச் சென்றுவிட்டார்கள்.

யாழ்ப்பாணத்தில் உள்ளது போன்ற நிப்பரப்பில் திறமையான முறையில் தரைச் சண்டை பிடிப்பதற்கேற்ற 'T 56, டாங்கி' இருந்தால், புலிகளை ஒரு ''வாங்கு வாங்கலாம்'' என்றது சிங்கள இராணுவம். வாங்கிக் கொடுத்த டாங்கிகளை புலோப்பளையிலும் - பூநகரியிலும் வைத்து, புலிகள் வாங்கிச் சென்றுவிட்டார்களே!

துவிச்சக்கர வண்டிகளில் திரிந்து தேடியோர், விமானங்களில் பறந்து தேடியும் கண்டது என்ன?

கைத்துப்பாக்கியைத் தூக்கிப் போரிடத் தொடங்கிய புலிகள் இயக்கம் இன்று, ஒரு விடுதலைச் சேனையைத் தமிழீழத்தில் அணிவகுத்து வைத்திருக்கின்றது! ○

# காம்புகள்

ஒரு கடுகளவு குரல் இரைந்து திட்டிக் கொண்டிருந்தது!

''வேப்ப மரம்! அதனை நல்லதென நான் கூற மாட்டேன்!''

''ஏன்?''

''பச்சைக் கசப்பு! அதன் வித்து எரியும்போது தரும் புகை - சீ!''

இரவு நேரம். எனினும் உணர்ந்து கொண்டேன், இந்தக் குரல் தரும் பிராணி நுளம்பு என்பதை!

விடிந்தபின் இன்னொரு குரல் கேட்டது.

''றோசாப் பூ மரம் வெறும் முள்ளுச் செடி! இந்த வேலியிலுள்ள மூலிகையாம் தூதுவளையில் இருப்பதும் பொல்லாத முள்ளைவிட வேறென்னவாம்?''

– இதைக் கூறியவர், தனது நா சிறிது நொந்து நின்ற அயல்வீட்டு ஆட்டுக் குட்டியார்; இதைக் கூறியபடி அவர் போய் விட்டார்!

ஒரு பருத்த மரம் தெரிந்தது. அது அழுதுகொண்டிருந்தது.

''ஏன்?'' என்றேன்.

சொல்ல முடியாது அது வெதும்பிக் கொண்டிருந்தது.

கொழும்பில் –

எதையோ பெற்றுவிட்ட தடித்த மனிதர் சிலரின் குரல் அங்கே ஒலித்துக்கொண்டிருந்தது!

''சமாதானம், சம வாழ்வு - இதைப் பெற, அடிமைப்பட்டு நிற்போருக்கு ஆயுதம் எதற்கு? அதைக் கீழே வைத்துவிட்டு, ஆள்வோருடன் பேசித் தீர்க்க வேண்டியதுதானே! அவ்விதம் ஒரு வழிக்கு வர வேண்டியதுதானே?''

''இது சரிவராவிட்டால்?'' என்றேன்.

''அவர்களை நாம் அழிக்க வேண்டியதுதான்! எம் அம்மையார் இதைச் செய்யத் தயங்கவே மாட்டார்!''

''ஆயுத பலம் கொண்டுதானே?''

''ஆமாம், இது அரசு! எங்கள் அம்மையாரின் அரசு! இது சரி என்று சொல்ல நாங்கள் இருக்கிறோம்!'' என்றன அவை!

என் நெஞ்சம் கனன்றது.

''அப்படியானால் ஆங்கிலேயரை எதிர்த்த பகவத் சிங்கும் ஒரு பயங்கரவாதியா?''

''நிச்சயமாக'' என்ற பதில் வந்தது!

''விடுதலை வீரன் சேகுவேராவும், அதுபோல தம் சுதந்திரத்தைப் பெற்றெடுத்த தென் ஆபிரிக்க சுதேச மக்களும் – உங்கள் அகராதியில் பயங்கரவாதிகளா?'' என்றேன்.

''அது அங்கு நடந்தவை! இங்கு .....''

''ஆம். இங்கு நீங்கள் யார்?'' எனக் கதறிற்று என் குரல்!

''நாங்கள் எம் அம்மையாரின் பக்க பலங்கள்'' என்றது என் முன் நின்ற ஒன்று!

''நாங்களும் 'ரமில்ஸ்' தான் தம்பி'' என்றது – தமிழ் மண்ணை அறியாத இன்னொன்று!

பூமி பிளந்தது போன்ற உணர்வு!

நான் மீண்டும் எம் தமிழீழத்தில் நிற்பது தெரிந்தது.

அந்தப் பருத்த மரம் வெதும்பிக் கொண்டிருப்பது மீண்டும் தெரிந்தது.

''என் கிளைகள் சில இன்று விடுபட்டு விலகி பட்டை இழந்த – தோல் உரிந்த - கோடரிக் காம்பாகி விட்டன'' என அழுதுகொண்டிருந்தது அந்தத் தாய்மரம்.

''அவை கோடரிக் காம்புகள்தான்! தமிழினத்தின் கயமைகள்தான்! இனத்துக்குத் துரோகம் செய்த ஈனக் குழுக்கள் என்னை அழிக்க முனைந்து நிற்கும் கோடரிக்காம்புகள்'' எனக் கனன்றது தமிழினத்தாய்!

நாக. பத்மநாதன் ○

# நுணுக்குக் காட்டி

☆ '' விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரையில் இராணுவத்திற்கும் அரசியல்துறைக்கும், பிரபாகரன் ஒருவரே பொறுப்பாக உள்ளார். இராணுவமும் அரசியலும் ஒன்றுடன் இன்னொன்று கைகோத்தபடி முன்நோக்கிச் செல்கின்றன. அவர் இராணுவ சமிக்ஞை காட்ட விரும்பினால், நாம் இழப்புக்களைப்பற்றிப் பேசவேண்டியதாகிறது.''

'' ...விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரையில் அவர்கள் தரமான இயக்க கட்டுக்கோப்புடன், திறமையான திட்டங்களுடன், போதுமான பயிற்சிகளுடன், சிறந்த தலைமைத்துவத்துடன் இருக்கின்றனர்.''

– சண்டே லீடர்' செவ்வியில்,
முன்னாள் இராணுவ அதிகாரி
மேஜர் ஜெனரல் தஹநாயக்க

---

☆ '' பிரபாகரனைப் பாராட்டும் முறையில் நான் ஒன்றைக் கூறவேண்டும். இன்று அவர் பலரின் வீரன். பல தசாப்தங்களாக நிமிர்ந்து நிற்க முடியாதவர்கள் இன்று எழுந்து நிற்கிறார்கள். எப்படிப் போரிடுவது? எப்படி மடிவது என்று, பிரபாகரன் சிங்களவர்களுக்குக் கற்றுக்கொடுக்கிறார்.''

– சுசில் முனசிங்க
(ஐ. தே. க. நாடாளுமன்ற உறுப்பினர்)
21. 05. 1995 ' சண்டே ஐலண்ட்'
செவ்வியில்.

---

☆ ''எல். ரி. ரி. ஈயை நீங்கள் நம்பாவிட்டால், யாழ்ப்பாண மக்களிடமிருந்து எதை நீங்கள் எதிர்பார்த்தீர்கள்?

...புலிகளை நம்பவில்லை என்று கூறுகிறீர்கள். பேச்சுவார்த்தையின்போது ஜனாதிபதி தன்னுடைய நிலைப்பாட்டை அடிக்கடி மாற்றிக்கொண்டதிலிருந்து, சமாதானப் பேச்சுவார்த்தையின்மேல் அரசு எவ்வித அக்கறையும் காட்டவில்லை என்பதுதான் புலனாகின்றது.

...வெளிநாட்டு அரசாங்கங்கள் புலிகளைக் கண்டித்துள்ளதாக எமக்குச் சொல்லப்பட்டது. முன்பும் அவர்கள் கண்டிக்கத்தான் செய்தனர். 1988ஆம் ஆண்டும் 1990ஆம் ஆண்டும் அவர்கள் கண்டித்தனர். கண்டனங்களைப் பெற்றுக்கொள்ளலாம்; தேநீரையும் பெற்றுக்கொள்ளலாம். ஆனால் எமது இரத்தத்தை நாம் சிந்தியே ஆகவேண்டும். சில வெளிநாடுகளிலிருந்து கண்டனங்களைப் பெற்றுக்கொள்வதற்காக வேண்டி நாம் எமது இரத்தத்தைச் சிந்தவேண்டியிருக்கின்றது!''

– ரணில் விக்கிரமசிங்க
(எதிர்க்கட்சித் தலைவர் )
நாடாளுமன்றத்தில்.
' வீரகேசரி ' (17.05.1995)

---

☆ '' 1972 ஆம் ஆண்டின் சிறீலங்கா அரசமைப்பில் பௌத்த மதத்திற்கு மிக முக்கிய இடம் வழங்கப்பட்டது. இவ்வாறு பெரும்பான்மையினரின் மதத்திற்கு வழங்கப்பட்ட விசேட அந்தஸ்தால் மற்ற மதங்கள் குறைவான அந்தஸ்துக்கு தள்ளிவிடப்பட்டன.''

- டொக்ரர் கார்லோ பொன்சேகா
(' சிலோன் டெய்லி நியூஸ் 'கட்டுரையில்).

---

☆ '' கடந்தகால இரு இன முரண்பாட்டு நிகழ்வுகளில் முஸ்லிம்களது பங்கும் கணிசமாக உள்ளதனை நேர்மையுடன் ஏற்றுக்கொள்ளவேண்டும். வட - கிழக்கில் முஸ்லிம்கள் மிகுந்த ஐக்கியத்துடன் வாழ்ந்து வந்துள்ளனர். ஆயின் மிகத்திட்டவட்டமான முறையிலேயே இங்கு இன ஐக்கியம் சிதைக்கப்பட்டுள்ளது. முஸ்லிம் அரசியல் தலைமைகளின் பேரினவாத சார்புநிலை, இவ்வாறான முரண்பாடுகளுக்கு முக்கியமானதொரு காரணமாகும். சகோதர சிறுபான்மைச் சமூகம் உயிர்வாழ்வதற்கான போராட்டத்தில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் போது, அச் சிறுபான்மைச் சமூக இனக் கோரிக்கைகள் தொடர்பாக அசிரத்தையான அறிக்கைகள் விடுதல், சிங்களப் பேரினவாத அரசுக்கு நம்பகமாய் ஒத்துழைப்புக் கொடுத்தல் மற்றும் போராளிகளைக் காட்டிக்கொடுத்தல் போன்ற பிற்போக்குத்தனமான நடவடிக்கைகளை, முஸ்லிம் அரசியல் தலைமைகள் வெற்றிகரமாக நடாத்தி முடித்துள்ளன. இச்சம்பவங்களுக்கு வெறுமனே ஐ. தே. கட்சி தலைமைகள் மட்டுமன்றி, முஸ்லிம் கொங்கிரஸ் தலைமைகளும் பொறுப்பான பங்கை வகித்துள்ளன. அரசியல் தலைமைகளின் இச்சம்பவங்களுக்கு அப்பால், முஸ்லிம் சமூகத்தின் போராளிக் குழுக்கள் என்று தங்களைத் தாமே அடையாளப்படுத்த முனைந்த சிறு சிறு குழுக்களும் தமிழ் மக்கள் மீது வன்முறையைக் கட்டவிழ்த்துவிட்டுள்ளன. இக் குழுக்களுக்கு, சிங்கள அரசின் கூலிப்படைப் பிரிவினர் தாராளமாக ஆயுதங்களை வழங்கியதும் குறிப்பிடத்தக்கதே ''.

– ஆர். எம். இர்தியாஸ்
' சரிநிகர் ' (மே 18 - மே 31, 1995)

---

☆ '' யுத்தம் ஆரம்பமானவுடன் ஆக்ரோஷமான தாக்குதலை அரசு தொடங்கிய போதும் புலிகளின் ' அவ்ரோ ' விமானங்கள் மீதான ஏவுகணைத் தாக்குதல்கள் இந்த ஆக்ரோஷத்தைத் தணித்துள்ளன. ஆயினும் இத்தாக்குதல் நடவடிக்கையின் பின், நிராயுதபாணிகளான மக்கள் மீது குண்டுகளையும் ஷெல்களையும் வீசி மனிதப் படுகொலைகளை ஆயுதப் படைகள் செய்துகொண்டிருந்தபோதும் சரி, அமெரிக்கா, இஸ்ரேல் போன்ற பயங்கரவாத அரசுகளுடன் நட்புக்கொண்டாடி, ஆயுதங்களும்பயிற்சிகளும் பெற்றுக்கொண்டபோதும் சரி, ' ஏகாதிபத்தியச் சதி ' குறித்து மௌனம் சாதித்த பலர், புலிகளின் கையில் ஏவுகணைகள் இருப்பதாக அறிந்ததும் அதனை, ஏகாதிபத்தியச் சதி என்றும், பிராந்தியப் பாதுகாப்புக்கான அச்சுறுத்தல் என்றும் கூறத் தொடங்கியுள்ளனர்.

... புலிகள் பேச்சுவார்த்தையிலிருந்து முறித்துக்கொண்டது சரியா தவறா என்பதைவிட, புலிகள் அவ்வாறு முறித்துக் கொள்ளவேண்டுமென்ற உள் நோக்குடனேயே அரசு இறங்கியது என்ற உண்மை முக்கியமானது.''

- ஆசிரியர் ' சரிநிகர் '
( மே 18 - மே 31, 1995 )

---

☆ ''...இப்போது இப்பிரச்சினை வடக்கு கிழக்குடன் மட்டும் வரையறுக்கப்பட்ட ஒரு பிரச்சினையாக இல்லை. பெருமளவு படையினர் கொல்லப்படும்போது, தென்னிலங்கையில் உள்ள ஒவ்வொரு வீட்டுக்கு முன்னாலும் இப்பிரச்சினை வந்துவிட்டது.

கொழும்பு இப்போது மிகவும் மோசமான ஒரு இடமாகிவிட்டது. வடக்கு, கிழக்கைவிட கொழும்பு ஆபத்தான இடமாகிவிட்டது. நாட்டின் முக்கிய தலைவர்கள் பலர் வடக்கு, கிழக்கில் கொல்லப்படவில்லை; கொழும்பிலேயே கொல்லப்பட்டுள்ளனர்.''

– எம். எச். எம். அஷ்ரப்
(அமைச்சர்)
' தினகரன் ' (27. 05. 1995)

---

☆ ''வடக்கிற்கான அத்திய வசியப் பொருட்கள் மீதான தடை நீக்கப்பட வேண்டும்; அவ்வாறானால், அரசாங்கம் தமிழ் மக்களுக்கு எதிராகப் போர் புரியவில்லை என்ற ஜனாதிபதி குமாரதுங்காவின் கூற்று உறுதிப்படுத்தப்படலாம். ''

- இனங்களுக்கிடையில் நீதிக்கும்
சமத்துவத்துக்குமான இயக்கம்
'வீரகேசரி' (02. 06. 1995)

---

☆ '' புலிகளை இராணுவ ரீதியில் பலவீனப்படுத்திவிட்டால் தமிழ் மக்களின் அரசியல் உரிமைக் கோரிக்கைகளை உடைப்பில் போட்டுவிடுவது ஒன்றும் கஷ்டமல்ல என்பது அரசுக்குத் தெளிவாகத் தெரியும். இது புலிகளுக்கு மட்டுமல்ல; வடக்கு, கிழக்கு மக்களுக்குங்கூடத் தெரியும். இதனால்தான் பூநகரி முகாம் விவகாரத்தில் குறிப்பாக வடக்கு மக்களின் நிலைப்பாடு, புலிகள் பக்கமாக இருக்கிறது. ''

– நாசமறுப்பான்
(பத்தி எழுத்தாளர்)
'சரிநிகர்' (மார்ச் 23 ஏப்ரில்
05 1995)

---

☆ '' இராணுவ முகாமாக மாற்றப்பட்ட நகரமாக மட்டக்களப்பு காணப்படுகிறது. அங்குள்ள அனைத்துப் பொலிஸ் நிலையங்களும் முட்கம்பி வேலிகளால் சூழப்பட்டுள்ளன. முக்கிய இடங்களில் எல்லாம் பாதுகாப்புக் காவலரண்கள் நிறுவப்பட்டுள்ளன.

இராணுவ வாகனங்கள் அங்கும் இங்குமாக ஓடித்திரிகின்றன. வீதியால் செல்பவர்கள் சந்திகளில் நிறுத்தப்பட்டு 'முகமூடி' களின் முன்னால் வரிசையாகச் செல்வதைக் காணமுடிகிறது.

படை அதிகாரிகள் பீதியுடன் நடமாடுகின்றனர். தற்போது நடக்கும் மோதல்களில் பெரும்பாலும் சிக்குண்டிருப்பது பொதுமக்களே ஆவர்.

கால் துண்டிக்கப்பட்ட நிலையில் பல பெண்கள் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் உள்ளனர். நிலக்கண்ணிகள் உள்ள பகுதிகளில் சோதனை நடாத்துவதற்கு படை அதிகாரிகள் தங்களைக் கேடயமாகப் பயன்படுத்தினர் என்று, அவர்கள் தெரிவித்தனர்,''

– ஜோர்ஜ் ஆர்னி
(பி .பி .சி . கொழும்பு நிருபர்)
'உதயன்' (17. 06. 1995)

---

☆ ''விடுதலைப் புலிகள் தலைவர் திரு. வே. பிரபாகரனைக் கைதுசெய்து ஒப்படைக்குமாறு இந்தியா விடுத்துள்ள கோரிக்கை, சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்க முடியாதவாறு முட்டுக் கட்டை நிலைமையை ஏற்படுத்தியுள்ளது.

– ஏ. சி. எஸ். ஹமீத்
(முன்னாள் வெளியுறவு அமைச்சர் )
நாடாளுமன்றத்தில்.
' உதயன் ' (22. 06. 1995)

---

☆ பதுளை நகரில் கடந்த திங்களன்று நடந்த சமாதான ஊர்வலத்தில் பாதுகாப்பு நிதியத்துக்கு நிதி சேகரிக்கப்பட்டது. சமாதான ஊர்வலத்தில் சென்றவர்கள் 'உண்டியல்களைக் குலுக்கி நிதி சேகரித்தனர்.

சுமார் ஆயிரம் பேர் கலந்துகொண்ட இந்த ஊர்வலத்தில், பெரும்பான்மையாக மாணவர்களே காணப்பட்டனர். சமாதானத்தை வலியுறுத்தும் பதாகைகளும் ஊர்வலத்தில் எடுத்துச் செல்லப்பட்டன.

' உதயன் ' (22.06.1995)

---

☆ ''சமாதானத்தின் பெயரால் மரணமும் அழிவுகளும் நாளாந்த நிகழ்வுகள் ஆகிவிட்டன,

– அதி. வண. ஜே. கிங்ஸ்லி
சுவாம்பிள்ளை
(மட்டு - திருமலை ஆயர்)
' உதயன் ' (22.06 1995)

---

☆ ''எனது இனிய நண்பர் டாக்டர் நீலன் திருச்செல்வம் மிக மூத்த இந்தியப் பிரமுகர் ஒருவரிடம், மூன்று மாதங்களுக்கு முன் இப்படிச் சொன்னதாகச் செய்தி: 'யாழ்ப்பாணமும் திருக்கோணமலையின் வடபுறமும் புலிகள் கட்டுப்பாட்டில் இருப்பதை இலங்கை அரசு ஒப்புக்கொண்டு அதனபேரில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்.

அதோடு இதையும் சேர்த்துக்கொள்ள விரும்புகிறேன்: நிலத்திலும் கரையோர கடல்வழியிலும் புலிகள் போர்த் தாக்குதல் நடத்தியதை வைத்துப் பார்க்கையில், புலிகளின் கரங்கள் இலங்கையின் பெரும்பாலான பகுதிகள் வரை எட்டுகிறது என்பதை இலங்கை அரசு உணரவேண்டும். தமிழரின் சுயாட்சிக் கோரிக்கையை ஏற்று, அதிகாரத்தை நியாயமாகப் பகிர்ந்தளிக்க இலங்கை அரசு தவறினால் இன மோதல் தொடரும் என்பதையும் அனைவரும் உணர வேண்டும் ''

''...யாழ்ப்பாணம், திருக்கோணமலை வாழ் தமிழர்கள் புலிகள் அமைப்பைப் போற்றுகின்றார்கள்; தமிழர்களுக்கு புலிகளிடம் ஒரு பிடிப்பு ஏற்பட்டிருக்கின்றது. ..''

''... ஆனால், இலங்கையின் நிலவரத்தில் மறுபடியும் நாம் (இந்தியா) யுத்தரீதியாக இறங்கிவிடக் கூடாது; பட்டது போதும்.''

– ஜே. என். டிக்சிற்
(இந்திய ராஜதந்திரி)
'இந்தியா ருடே' (ஜூன் 6 - 20, 1995 )

# ஒட்டி ஒட்டி வருவான் உளவாளி;

# சுற்றிச் சுற்றி புலனால் அவதானி!

## அந்நிய சக்திகளின் புலனாய்வுப் போரை வெல்ல அத்தனை பேருமே துணையாகி நிற்போம்!

படைகளை நகர்த்தி வந்து நேரடியாகப் பிரகடனப்படுத்தப்பட்ட ஆக்கிரமிப்புப் போரும், உளவாளிகளை ஊடுருவ விட்டு மறைமுகமாக நடைமுறைப்படுத்தப்படும் புலனாய்வுப் போருமாக, ஒரு பூரணப்பட்ட இனப்படுகொலையை நாம் இப்போது எதிர்கொண்டு நிற்கின்றோம்.

தமிழினத்தின் தேசிய விடுதலைப் போராட்டத்தைத் தோற்கடித்து தமிழ்த்தேசிய எழுச்சிக்குப் புதைகுழி தோண்டி, இனத்தை முற்றாக அடிமைகொள்ளும் அரசியல் மூலோபாயத்துடனேயே - அரசியல் ரீதியான நடவடிக்கைகளுக்கு வலுவாக - இந்த இருவழிப்பட்ட இராணுவப் பரிமாணங்களினூடான நாசகாரச் செயற்பாடுகள், எம் இனத்தை நோக்கி ஏவிவிடப்பட்டுள்ளன.

அரசுகளின் அங்கீகாரம் பெற்றதான - அதிகாரபூர்வமாக நடைமுறைப்படுத்தப்படும் - இந்த முழு இனப்படுகொலை நடவடிக்கையை நாம் சிறீலங்கா, இந்தியா என்ற இருவேறு தரப்பினரிடமிருந்து எதிர்கொண்டுள்ளோம்.

விடுதலைப் புலிகளாக உள்ள உங்களது படைவீரர்கள் சிங்களப் படைகளின் ஆக்கிரமிப்புப் போர் முனையை எதிர்கொண்டு களமாடுகின்ற அதேவேளையில், தேசத்தின் குடிமக்களானநீங்கள்தான், இந்திய - சிறீலங்கா புலனாய்வு நிறுவனங்களுக்கு எதிரான புலனாய்வுப் போரை வென்றெடுக்க வேண்டியவர்களாக உள்ளீர்கள். 'இரண்டாவது ஈழப்போர்' காலகட்டத்தில் முனைப்போடு நிகழ்த்தப்பட்ட இத்தகைய புலனாய்வுப் படைநகர்த்தல்களை, வெற்றிகரமாக முறியடித்த விடுதலைப் புலிகளின் புலனாய்வுத்துறையினது இயங்கு களமாக மக்களே விளங்கினார்கள் என்பது, இந்த இடத்தில் சொல்லிக் காட்டப்படவேண்டிய முக்கிய நிகழ்வாகும்,

அதேபோலவே - மோதல் தவிர்ப்புக்கும், சமாதானப் பேச்சுவார்த்தைக்கும் கட்டுப்படாமல் - நேற்றும் இன்றும் தொடர்ந்து, இனிமேலும் நிகழ்ந்துகொண்டேயிருக்கப்போகும் புலனாய்வு ஊடுருவல்களைக் கண்டுபிடித்து - முறியடித்து - விடுதலையை நோக்கிப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லவும் எம்மினிய மக்களே துணையாகவும், பலமாகவும் திகழ்ந்து செயற்படவேண்டும்.

எங்கள் தாயகப் பகுதிகள் மீதான புலனாய்வு ஊடுருவல்களானவை -

இந்தியத் தரப்பிலிருந்து. அதன் அரசுப் புலனாய்வுத்துறையான 'றோ'வினாலும் (Research and Analysis wing - Raw); சிறீலங்காத் தரப்பிலிருந்து அதன் அரசுப் புலனாய்வுத்துறையான 'தேசிய புலனாய்வுப் பணியக'த்தினாலும்(National Inteligence Bureau - NIB) 'இராணுவப் புலனாய்வுப் பிரிவி'னாலும் (Military Inteligence) இயக்குவிக்கப்படுகின்றன.

புலனாய்வு ஊடுருவல்கள்மூலம் தமது உளவாளிகளைக்கொண்டு, எதிரிகள் மூன்று பிரதான காரியங்களைச் செயற்படுத்தக்கூடிய சாத்தியக்கூறுகள் உள்ளன. ஒன்று, விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் நாசங்களை விளைவித்தல். இரண்டாவது, விடுதலைப் புலிகளைப் பற்றிய தகவல்களை அறிதல். மூன்றாவது, விடுதலைக்கு விரோதமான சதிவலைகளைப் பின்னுதல் என்பனவாகும்.

நாசவேலைகள் எனும்போது - பொதுமக்கள் கூடும் - திரளும் மையங்களில் வெடிகுண்டுகளினாலோ அல்லது வேறு வகைகளினாலோ பாரிய உயிர்ச்சேதத்தை ஏற்படுத்துவது; தேசத்தின் வளங்களை - பொருளாதாரக் கேந்திரங்களை - நிர்மூலமாக்குவது போன்றனவாகும்.

தகவலறிதல் எனும்போது - புலிகளின் படையணிகளின் அசைவுகள் பற்றியும், தாக்குதல் திட்டங்கள் பற்றியும் அறிந்து தமது இலக்குகளைத் தற்காத்துக்கொள்வது மட்டுமன்றி, மேலே சொல்லப்பட்ட விதமான நாசங்களை விளைவித்தல், படைகளை நகர்த்தி பிரதேசங்களை ஆக்கிரமித்தல் போன்றவற்றுக்கேற்ற தகவற் தரவுகளைப் பெறுவதும் ஆகும்.

சதிவலைகளைப் பின்னுதல் எனும்போது - போராட்ட சக்தியை அழித்தல் உட்பட்ட - நாசங்களை விளைவிக்கவும், அதியுயர் இரகசியங்கள் அடங்கிய - தகவற் தரவுகளைப் பெறவும், மிக இலகுவான வாய்ப்புக்களை உருவாக்கக் கூடியதான சதி ஏற்பாடுகளைச் செய்வது ஆகும். உதாரணமாக - தலைவர் பிரபாகரனைப் படுகொலை செய்து, விடுதலைப் போராட்டத்தை ஒழித்துக்கட்டி தமிழினத்தின் எதிர்காலத்தை இருள்மயமானதாக்கி விடவென இந்தியாவின் 'றோ'வினால் நெறிப்படுத்தப்பட்டு, அண்மையில் விடுதலைப் புலிகளின் புலனாய்வுத் துறையினால் முறியடிக்கப்பட்ட, அதியுயர் சதிநாசகாரத் திட்டமொன்றைக் குறிப்பிடலாம்.

இதுமட்டுமன்றி - இத்தகைய சதிவேலைகளின் இன்னொரு முக்கிய அங்கமாக-மக்களின் போராட்ட உறுதிப்பாட்டை உடைத்தெறியும் முயற்சிகளிலும் எதிரிப் புலனாய்வுத்துறைகள் ஈடுபடுகின்றன.

மக்களுக்குள் குழப்ப நிலையைத் தோற்றுவிக்கக்கூடிய கருத்துக்களை விதைத்து, விடுதலைப் போராட்டத்திற்கு விரோதமான எண்ணப்பாடுகளை உருவாக்கி, மக்களின் தேசபக்தியையும் - இலட்சியப்பற்றையும் - போராட்ட உறுதிப்பாட்டையும் சீர்குலைத்து, போராட்டத்தின் மையமாக உள்ள மக்கள் சமூகத்தை ஒரு ஈடாட்ட நிலைக்குள் தள்ளிவிடப் பகைவர்கள் முயலுகின்றார்கள்.

இந்தக் காரியத்தைச் சுலபமாகச் சாதிப்பதற்காக சமூகத்தின் மத்தியதரத்திற்குக் கீழ்ப்பட்ட பாமர மக்களுக்குள் மட்டுமன்றி, எமது சமூகத்தின் உயர்குழாமாக உள்ள புத்திஜீவிகளுக்குள்ளும் தமது உளவாளிகளை ஊடுருவச் செய்வதோடு-போராட்டத்திற்கு விரோதமான கருத்துலகங்களை உருவாக்கக்கூடிய வல்லமையுள்ளவர்களான - அத்தகைய முக்கிய நபர்களைத் தமது கையாட்களாக மாற்றும் வேலைப்பாடுகளிலும் எதிரிப் புலனாய்வாளர்கள் ஈடுபடுகின்றனர்.

இவ்வாறாக,புலனாய்வு ஊடுருவல்களானவை பன்முகப்பட்ட பரிமாணங்கள் கொண்ட ஒரு செயற்பாடாக, எமது தாயகத்தின் மீது நடைமுறைப்படுத்தப்படுகின்றன. இவற்றின் விளைவுகள் எத்தகைய பாரதூரமானவையாக இருக்கக் கூடியன என்பதை, நீங்கள் உய்த்துணர முடியும். அந்த விளைவுகள் எமது தேசிய விடுதலைப் போராட்டத்தைப் பாரிய பின்னடைவுக்கு உள்ளாக்கி, அழிவுக்குள் வீழ்த்திவிடக்கூடியன என்பதையும் நீங்கள் விளங்கிக்கொள்ள முடியும். நேரடியான இராணுவப் படையெடுப்புக்களைவிடவும், மறைமுகமான இந்தப் புலனாய்வு நடவடிக்கைகள் மிகப் பெரிய பயங்கரங்களை ஏற்படுத்த வல்லன என்பதும், நீங்கள் அறியாததல்ல.

எதிரி அரசுகளின் புலனாய்வுத் துறைகள் தங்கள் உளவாளிகளை ஊடுருவல் செய்ய வசதியான சுலபமையமாக, மக்களே விளங்குகின்றார்கள். எனவே, அவதானமான - உன்னிப்பான - செயற்பாடுகளினூடாக அவற்றை முறியடிக்க வேண்டிய பொறுப்பும் எம் மக்களையே சாருகின்றது.

வழமைக்கு மாறான முகம், வழமைக்கு மாறான நடத்தை, வழமைக்கு மாறான பேச்சு,வழமைக்கு மாறான செயல், வழமைக்கு மாறான பொருள் இவை போன்றவை மட்டும் ஒரு உளவாளிக்குரிய குணாம்சங்களாகா.

எதிரியானவன், தன் உளவாளியை'வழமை'யாகவும் மாற்றுவான்; இன்னும் மேலே போய் 'வழமை'யையே தன் உளவாளியாகவும் மாற்றுவான்.

புலிவீரர்களுக்கு மட்டுமான உட்சுற்று வெளியீடு ஒன்றில் ''தொண்டைக்குள் 'சென்றி' போடுங்கள்; தகவல்கள் தப்பிப் போகலாம்'' என அறிவுறுத்தப்பட்டிருக்கின்றது. தகவல்கள் கசிவடைவதற்கான பிரதான காரணமும் போராளிகளே என்று குற்றம்சாட்டுவது போல, அந்த அறிவுறுத்தல் வரையப்பட்டுள்ளது. அதேசமயத்தில் - ''செவிகளுக்குக் காவல் போடுங்கள்; தகவல்கள் உட்புகுந்துவிடலாம்'' என்று பொதுமக்களைப் பார்த்தும் சொல்ல விரும்புகின்றோம். தெரிந்துகொள்வதால்தான் இன்னொருவரிடம் தெரியப்படுத்துகின்ற பிரச்சினையே எழுகின்றது.

புலிவீரர்களைச் சந்திக்கும் போதும், போராளிகளுக்கு நெருக்கமானவர்களைக் காணுகின்ற போதும் - இயக்கச் சமாச்சாரங்கள் பேசி விடுப்புக்கதை கேட்டு, ஆர்வத்துடன் தகவல்களைப் பிடுங்குகின்றவர்கள் -

அலட்சியத் தன்மையுடனும், எந்தவிதமான பொறுப்புணர்ச்சியற்றும், ''எனக்குத் தெரியும்'' என்று விலாசம் காட்டும் நோக்கத்தோடு, கண்ட கண்ட இடங்களெல்லாம் கதைத்துத் திரிவது அழகும் அல்ல; நாட்டுக்கு நன்மை பயக்கக்கூடியதும் அல்ல. மாறாக, தேசத்திற்குத் தீமை விளைவிக்கக் கூடிய ஆபத்தான பின்விளைவுகளையே தரக்கூடியது என்பது நீங்கள் அறியாததும் அல்ல.

தேசத்தின் இரகசியங்களைப் பாதுகாத்தல் என்பது, இன்று, தனியே விடுதலைப் புலிகளினது மட்டும் கடமையல்ல. புலிகள் இயக்கம் மக்களோடு இரண்டறக் கலந்துள்ள - ''மக்களே புலிகள்'' என்றாகிவிட்ட இன்றைய போராட்ட வளர்ச்சிக் கட்டத்தில் 'இயக்கத்தினுடையது' என்று சொல்லக் கூடிய, தேசத்தின் பாதுகாப்போடு பின்னிப் பிணைந்த இரகசியங்கள், வெளியிலும் உலாவுவது தவிர்க்க முடியாதது. எனவே, இங்கு பொறுப்புணர்ச்சி என்பது போராளிகளுக்கு மட்டுமன்றி பொதுமக்களுக்கும் கட்டாயமாக இருக்க வேண்டியதாகின்றது.

நமக்குத் தெரிந்தவற்றை அடுத்தவருக்குத் தெரிவிக்காமல் விடுவது மட்டுமல்ல; அடுத்தவருக்கு தெரிந்தவற்றை நாம் அறிய முனையாமல் இருந்து விடுவதும் சிறந்ததே; எம் தேசத்துக்கு நாம் ஆற்றும் ஒரு கடமையாகவும் அது ஆகும்.

நண்பனுடைய அப்பாவின் நண்பனுடைய மகன் உளவாளியாய் இருப்பான் ......

நண்பியினுடைய காதலனின் தங்கையினுடைய காதலன் உளவாளியாய் இருப்பான்......

'' ஒருத்தருக்கும் சொல்லாதையுங்கோ......உங்களுக்கு மட்டும் சொல்லுறன்......'' என்று, ஆள் மாறி ஆள் மாறி சொல்லிக் கொண்டிருந்தால், அந்த 'ஒவ்வொருத்தரில்' ஒருவன் உளவாளியாய் இருப்பான்......

'' மக்களே போல்வர் கயவர்'' என்கிறார் **வள்ளுவர்**. மக்களோடு மக்களாய், தானுமொரு 'மக்களாய்' கயவன் வேறுபாடற்றுக் கலந்திருப்பான் என்கிறது அந்தக் குறள். எனவே, எச்சரிக்கையைக் கடைப்பிடிக்க வேண்டியது நாம் தான்.

இப்படித்தான் இருப்பான் உளவாளி என்று, எப்படியும் நாம் எச்சரிக்கை செய்ய முடியாது. தெருப்பிச்சைக்காரனிலிருந்து, சமூகத்தின் பெரும்புள்ளிகள் வரை எந்த வடிவத்திலும் உளவாளி உருமறைத்திருப்பான். எனவே, அவதானத்துடன் இருக்க வேண்டியது நாங்கள்தான்.

எதையுமே அலட்சியப்படுத்தாமல், அருகிலிருக்கும் அத்தனையையும் ஐம்புலன்களாலும் அவதானியுங்கள்.

எவரைப் பற்றியாவது, எதைப் பற்றியாவது - மெல்லிதான சந்தேகம் எழுந்தால்கூட, அருகிலிருக்கும் காவல்துறை நிலையத்திலோ, அல்லது புலிகளின் முகாம்களிலேயோ உடனடியாகவே அறிவியுங்கள்.

தேசபக்தியோடு செயற்படுங்கள்.

**விடுதலையை** வென்றெடுக்க வேண்டியவர்கள் தமிழீழ மக்களாகிய நாங்களேதான்; விடுதலையின் பயனை அனுபவிக்கப்போவதும் மக்களாகிய நாமெல்லாருந்தான்! ○

---

**ஊரோடு சேர்வான்;**
**உறவென்று வருவான்;**
**உயர்வான கதைகள் சொல்லி**
**உதவிகளும் செய்வான் - எமக்குள்**
**வேரோடும் நெருஞ்சியை இனங்காண்;**
**அவன்**
**வேற்றாரின் நெருங்கிய கையாள்!**

# பதவியாக் குடியேற்றத் திட்டம்

திருக்கோணமலை மாவட்டத்தின் வடபகுதியினை சிங்களமயப்படுத்தும் நோக்கத்துடன், 1957ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட பாரிய சிங்களக் குடியேற்றத் திட்டமே பதவியாக் குடியேற்றத் திட்டமாகும். 'பதிவில் குளம்' என்ற பாரம்பரிய தமிழ்ப் பிரதேசம் 'பதவியா' எனப் பெயர் மாற்றப்பட்டு, சிங்களக் குடியேற்றத்திற்கு உட்படுத்தப்பட்டது. பதவியாக் குளம் திருக்கோணமலை மாவட்டத்தின் வடமேற்கு எல்லையில் அமைந்துள்ளது. நிர்வாக ரீதியாக இது அனுராதபுர மாவட்டத்திலிருந்தபோதிலும், இக் குடியேற்றத் திட்டத்தில் நீர்ப்பாசன வசதிகளைப் பெறும் நிலங்களில் பெரும் பகுதி, திருக்கோணமலை மாவட்டத்தின் வடபகுதியில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




1957ஆம் ஆண்டு செப்ரெம்பர், ஒக்ரோபர் மாதங்களில் முதல் தொகுதியாக 634 குடும்பங்கள் பதவியாக் குடியேற்றத் திட்டத்தில் குடியமர்த்தப்பட்டன. இவற்றில் 434 குடும்பங்கள் கொழும்பு மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்டு, இங்கு குடியமர்த்தப்பட்டன. 1958ஆம் ஆண்டு 158 குடும்பங்களும், 1959ஆம் ஆண்டு 1100 குடும்பங்களும் பதவியாக் குடியேற்றத் திட்டத்தில் குடியமர்த்தப்பட்டன. 1963ஆம் ஆண்டின் முடிவில் பதவியாக் குடியேற்றத் திட்டத்தில், மொத்தம் 2119 குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டிருந்தன. 1969ஆம் ஆண்டின் முடிவில் இக் குடியேற்றத் திட்டத்தில் மொத்தம் 3549 குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டிருந்தன. 1977ஆம் ஆண்டின் இறுதியில் இக்குடியேற்றத் திட்டத்தில், 4267 குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டிருந்தன.

இன்று பதவியா என்று அழைக்கப்படுகின்ற உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள தென்னைமரவாடி, அமரிவயல், புல்மோட்டை ஆகிய பிரதேசங்களில் 1901ஆம் ஆண்டுக் குடிசன மதிப்பீட்டின்போது. 297 தமிழர்களும் 460 முஸ்லிம்களும் ஒரேயொரு சிங்களவரும் இருந்தனர். எனவே 1901இல் இப்பிரதேசத்தின் மொத்த சனத்தொகையில் முஸ்லிம்கள் 61 சதவீதமாகவும் தமிழர்கள் 39சதவீதமாகவும் இருந்தனர். 1981ஆம் ஆண்டுக் குடிசன மதிப்பீட்டின்படி, பதவியா உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மொத்த சனத்தொகையான 18,084 பேரில் 12,050 பேர் சிங்களவர்களாயும் 4695 பேர் முஸ்லிம்களாயும் 1312 பேர் தமிழர்களாயும் இருந்தனர். இதன்படி, இப்பிரதேசத்தின் மொத்த சனத்தொகையில் 66.6 சதவீதம் சிங்களவர்களாயும் 7.2சதவீதத்தினர் தமிழர்களாயும் 26 சதவீதம் முஸ்லிம்களாகவும் இருந்தனர்.

1972ஆம் ஆண்டு இலங்கை அரசாங்கம், திருக்கோணமலை மாவட்டத்தின் நிர்வாக எல்லைகளில் ஒரு மாற்றத்தினை ஏற்படுத்தியது. 1972ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம், திருக்கோணமலை மாவட்டத்தின் கட்டுக்குளம்பற்று உதவி அரசாங்க அதிபர் பிரிவின் வட பகுதியிலிருந்து புல்மோட்டை, தென்னைமரவாடி, பரணமதவாச்சி ஆகிய கிராமசேவகர் பிரிவுகள் அனுராதபுர மாவட்டத்திலுள்ள பதவியா உதவி அரசாங்க அதிபர் பிரிவோடு இணைக்கப்பட்டன. மேலே கூறப்பட்ட தமிழ்ப் பிரதேசங்கள், சிங்கள நிர்வாக மாவட்டம் ஆகிய அனுராதபுர மாவட்டத்தோடு இணைக்கப்பட்டபோதிலும், தேர்தற் தொகுதியினைப் பொறுத்தவரையில் இப்பிரதேசங்கள் தொடர்ந்தும், திருக்கோணமலை மாவட்டத்தின் சேருவல - திருக்கோணமலை தேர்தற் தொகுதிகளுக்குள்ளேயே இருந்தமை குறிப்பிடத்தக்கது. இதன் மூலம் திருக்கோணமலை மாவட்டத்தின் சிங்கள வாக்காளர்கள் தொகையினைக் குறையவிடாமல் அரசாங்கம் பார்த்துக்கொண்டது.

1982ஆம் ஆண்டு மே மாதம், 13ஆம் திகதி தென்னைமரவாடி, புல்மோட்டை, பரணமதவாச்சி, பதவிசிறிபுர, ஜயந்திவீவ ஆகிய கிராமசேவகர் பிரிவுகள் அனுராதபுர மாவட்டத்திலிருந்து பிரிக்கப்பட்டு, திருக்கோணமலை மாவட்டத்தோடு இணைக்கப்பட்டன. 1972ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம், திருக்கோணமலை மாவட்டத்தின் நிர்வாகத்திலிருந்து எடுக்கப்பட்ட புல்மோட்டை, தென்னைமரவாடி, பரணமதவாச்சி ஆகிய மூன்று கிராமசேவகர் பிரிவுகளோடு பதவிசிறிபுர, ஜயந்திவீவ ஆகிய இரண்டு கிராமசேவகர் பிரிவுகளும் சேர்ந்தே 1982 இல் திருக்கோணமலைமாவட்டத்தோடு இணைக்கப்பட்டன. இத்தகைய நிர்வாக எல்லை மாற்றமும் ஒரு சிங்களக் குடியேற்றமே. 1972 இல் இப்பிரதேசங்கள் திருக்கோணமலை மாவட்டத்திலிருந்து எடுக்கப்பட்டு, அனுராதபுர மாவட்டத்தோடு இணைக்கப்படும்போது இப்பிரதேசத்தின் மொத்த சனத்தொகை 4651 பேராகும். 1982 இல் இப்பிரதேசங்கள் மீண்டும் திருக்கோணமலை மாவட்டத்தோடு இணைக்கப்பட்டபோது சனத்தொகை 18,084 பேராகும். மேலும் 1972 இல் இப்பிரதேசங்கள் அனுராதபுர மாவட்டத்தோடு இணைக்கப்படும்போது 3285 தமிழ் பேசும் மக்களும் 672 சிங்களவர்களும் இருந்தனர். இதன்படி மொத்த சனத்தொகையில் 86 சதவீதம் தமிழ்பேசும் மக்களாயும் 14 சதவீதம் சிங்களவர்களாயும் இருந்தனர் ஆனால் 1982ஆம் ஆண்டு இப்பிரதேசங்கள் அனுராதபுர மாவட்டத்திலிருந்து பிரிக்கப்பட்டு திருக்கோணமலை மாவட்டத்தோடு இணைக்கப்பட்டபோது, இப்பிரதேசத்தில் 12,050 சிங்களவர்களும் 4695 முஸ்லிம்களும் 1312 தமிழர்களும் காணப்பட்டனர். இதன்படி இப்பிரதேசத்தின் மொத்த சனத்தொகையில் 66.6 சதவீதம் சிங்களவர்களாயும் 33.3 சதவீதம் மட்டுமே தமிழ்பேசும் மக்களாயும் இருந்தனர். இவ்விணைப்பின்மூலம் திருக்கோணமலை மாவட்டத்தின் வடக்குப் பகுதியில் பதவியா என்ற புதியதொரு சிங்கள உதவி அரசாங்க அதிபர் பிரிவு உருவாக்கப்பட்டது. இதனது மொத்த நிலப்பரப்பு 205சதுர கிலோ மீற்றர் ஆகும்.

இவ்வாறான, தமிழர் பிரதேசங்களின் நிர்வாக எல்லைகளின் மாற்றம், ஒரு மறைமுகமான சிங்களக் குடியேற்ற நடவடிக்கையே. 1972ஆம் ஆண்டு தமிழர் பிரதேசங்களின் சில பகுதிகள் அனுராதபுர மாவட்டத்தோடு இணைக்கப்பட்டதற்குக் காரணம் கிடையாது; அதே போன்று, 1972இல் எடுக்கப்பட்ட தமிழர் பிரதேசங்களோடு சிங்களவர்கள் பிரதேசங்களையும் சேர்த்து 1982இல் திருக்கோணமலை மாவட்டத்தோடு மீண்டும் இணைத்தமைக்கும், காரணம் கிடையாது. ஆனால், இந் நடவடிக்கைக்கு வெளிப்படுத்த முடியாத ஒரு காரணம் உண்டு இந் நிர்வாக எல்லை மாற்றம் காரணமாக ஓரிரவிலேயே சிங்களவர்கள் திருக்கோணமலை மாவட்டத்தின் பெரும்பான்மையினமாச மாறிவிட்டனர். 1981ஆம் ஆண்டுக் குடிசன மதிப்பீட்டின் போது, திருக்கோணமலை மாவட்டத்தில் சிங்களவர் தொகை 86341 ஆகவும், தமிழர்கள் தொகை 93510 ஆகவும் இருந்தது. ஆனால் இந் நிர்வாக எல்லை மாற்றத்தின் பின் திருக்கோணமலை மாவட்டத்தின் தமிழர் தொகை 94822 ஆகவும் சிங்களவர் தொகை 98391 பேராகவும் இருந்தது. 1950ஆம் ஆண்டு முதல், பல்வேறுபட்ட பெயர்களில்சிங்களக் குடியேற்றங்களைத் திருக்கோணமலை மாவட்டத்தில் மேற்கொண்ட போதிலும், 1981 ஆம் ஆண்டுக் குடிசன மதிப்பீட்டுத் தரவுகள், மாவட்டத்தில் சிங்களவர் தொகை தமிழர்களிலும் பார்க்க ஏறத்தாழ 7000 பேரால் குறைவாக இருந்தமையைவெளிப்படுத்தியது. எனவே, மேலும் சிங்களவர்களைக் குடியமர்த்தி சிங்களவர்களைப் பெரும்பான்மையினராக மாற்றுவதற்குச் சற்றுக் காலம் எடுக்கும் என்பதனை அரசாங்கம் உணர்ந்தது. இதன் விளைவாகவே, 1982ஆம் ஆண்டு மே மாதம் 13ஆம் திகதி, அனுராதபுர மாவட்டத்தோடு இணைக்கப்பட்டிருந்த ஐந்து கிராம சேவகர் பிரிவுகளைத் திருக்கோணமலை மாவட்டத்தோடு இணைத்து, திருக்கோணமலை மாவட்டத்தில் - தமது சொந்த மண்ணிலேயே - தமிழர்கள் ஓரிரவிலேயே சிறுபான்மையினராக மாற்றப்பட்டனர்.

## சி. வரதராஜன்

இந்த அனுபவத்தின் பின்னணியில், தமிழர் பிரதேசங்களின் எல்லைகளை மாற்றுதல் என்ற சந்திரிகா அரசாங்கத்தின் புதிய திட்டத்தினை நாம் கவனத்துடனேயே நோக்குதல் வேண்டும். கடந்த 40 ஆண்டுகாலமாக தமிழர் தாயகத்தில் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட சிங்களக் குடியேற்றத் திட்டங்களினால் சிங்களமயப்படுத்தப்பட்ட பிரதேசங்களைப் பாரம்பரிய சிங்களவர் பிரதேசம் எனக்கூறி, அவற்றை அருகில் உள்ள சிங்கள மாவட்டங்களோடு இணைத்துவிட்டு, மிகுதியாக உள்ள பிரதேசங்களே தமிழரின் பாரம்பரிய பிரதேசம் எனக்காட்டுவதற்கு முயற்சிகள் நடைபெறுகின்றன. இன்று சிங்கள மாவட்டங்களோடு இணைக்கப்படும் தமிழர் பிரதேசங்களில் எதிர்ப்பின்றி பெருமளவு சிங்களவர்களைக் குடியமர்த்திவிட்டு, பின்னொரு காலத்தில் இப்பிரதேசங்களை மீண்டும் தமிழர் மாவட்டங்களோடு இணைக்கும்போது, இன்று சிங்கள மாவட்டங்களில் தமிழர்கள் எப்படி வாழ்கின்றனரோ அதே நிலையே சொந்த மண்ணில் வாழும் தமிழர்களுக்கும் ஏற்படும். எனவே தமிழீழத்திற்குப் புதிதாக எல்லைகளை வகுக்கும் சந்திரிகா அரசாங்கத்தின் திட்டம், தமிழீழத் தேசியத்தினைச் சிதைக்கும் திட்டமாகும். தமிழீழத்திற்குப் புதிதாகஎல்லைகள்வகுக்கவேண்டியதில்லை; ஏற்கெனவே சிங்களவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் தமிழர் பிரதேசங்களை விடுவிக்கும்போது, இந்து மா சமுத்திரத்தில் தமிழீழம் என்றொரு புதிய நாடு பிறக்கும்! ○

## பேச்சுவார்த்தையைப் புலிகளாம் முறித்தது! முறிக்கவைத்தது யாராம்?

வெகுசன தொடர்பு சாதனங்களைச் சுதந்திரமாகவும் - சுயாதீனமாகவும் இயங்க அனுமதிப்பது என்ற சந்திரிகா அம்மையாரின் உத்தரவாதத்தின் பேரில், திரு. வசந்தராஜா, 'ரூபவாகினி' கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளராய் நியமனம் பெற்றார். ஜனநாயக மீளளிப்பு இப்படியாக ஆரம்பமாகும் என்று, சிங்கள மக்களுக்கு அவரால் தேர்தல் வாக்குறுதியும் அளிக்கப்பட்டது. புலிகளைத் தமிழ் மக்களிடமிருந்து அந்நியப்படுத்த வேண்டும் என்பது பற்றி சந்திரிகாவிற்கும் - வசந்தராஜாவிற்கும்' இடையில் இருந்த இரகசிய உடன்பாடு, இப்போது, திருவாளர் வசந்தராஜாவின் வாயாலேயே அம்பலமாகியிருக்கின்றது.

அரசாங்கம் பல்வேறு வாக்குறுதிகளையும் காற்றில் பறக்கவிட்டது போலவே, வெகுசனத் தொடர்பு சாதன விடயத்திலும் நடக்கலாயிற்று. சந்திரிகா பற்றியும் அவரது அரசாங்கம் பற்றியும் சில தகவல்களை வெளியிட்டமைக்காக, சிங்களப் பத்திரிகையாளர்கள் - ஐ. தே. கட்சியின் பாணியில் - சந்திரிகாவின் குண்டர்களால் தாக்கப்பட்டனர்.

அரசின் ஊதுகுழலாக 'ரூபவாகினி'யைச் செயற்படுத்துமாறு சந்திரிகா பணித்தார்; இதனால் வசந்தராஜா இராஜினாமாச் செய்தார். வசந்தராஜாவை முறித்தது போலவே, புலிகளுடனான பேச்சுவார்த்தையையும் சந்திரிகாவே முறித்தார். வசந்தராஜா இழப்புடன் ஏமாந்துபோனார்; ஆனால், புலிகள் இயக்கம் ஏமாறாது - இழப்புகளின்றி - வாபஸ் வாங்கியது.

சந்திரிகா அம்மையார் வாக்குறுதியை முறித்தபோது வசந்தராஜா கதியற்று இராஜினாமாச் செய்துவிட்டுப் புலம்பினார். ஆனால், சந்திரிகா அம்மையார் பேச்சுவார்த்தையை முறித்தபோது, புலிகள் போரைத் தொடங்கினர்! ○

# 1987 ஒப்பந்தம் : இந்தியாவின் அழுத்தமும்

# தலைவரின் உடையாத உறுதியும்!

1987 யூலை 27 ஆம் திகதி நள்ளிரவு. புதுடில்லியில், தலைவர் தங்கவைக்கப் பட்டிருந்த 'அசோகா விருந்தினர் விடுதி' யின் அறையினுள் அழைப்பு மணி ஒலித்தது இந்திய உள்நாட்டுப் புலனாய்வுத் திணைக்களத்தின் இயக்குனர் திரு. நாராயணன் கதவிற்கு வெளியே நின்றுகொண்டிருந்தார் கதவு திறக்கப்பட்ட பின் உள்ளே வந்து, ''பிரதமரின் இல்லத்திலிருந்து நேராக இங்கு வந்துள்ளேன்'' என்று பேச்சை ஆரம்பித்த அவர், ''பிரதமர் ராஜீவ் காந்தி உங்களை அவசரமாகச் சந்திக்க விரும்புகின்றார்'' என்று, தலைவர் பிரபாகரனுக்கு அழைப்பு விடுத்தார். அதை ஏற்றுக்கொண்ட தலைவர் அவர்கள், திரு நாராயணன் ஒழுங்குசெய்த வாகனத்தில் ஏறி, பிரதமர் ராஜீவின் இல்லம் நோக்கி விரைந்தார்,

பிரதமரின் இல்லத்தை வாகனம் சென்றடைந்ததும், முன்னே வந்த திரு.ராஜீவ் காந்தி, '' உம்மைப்பற்றி அறிந்திருக்கின்றேன்; நீர் ஒரு சிறந்த வீரன் '' என்று புகழாரம் சூட்டியபடி, அன்புடனும் மரியாதையுடனும் வரவேற்றார்.

சம்பிரதாயபூர்வமான நலன் விசாரிப்புகளும் முடிய, வந்த விடயம் பற்றிக் கதைப்பதற்கு இருபகுதியினரும் தயாரானார்கள்.

பிரதமர் ராஜீவ் காந்தியுடன் அவரின் செயலாளரும், மற்றும் திரு. நாராயணன், திரு. பண்ருட்டி இராமச்சந்திரன் ஆகியோரும் உடன் இருந்தனர். தலைவர் பிரபாகரனுடன் திரு. அன்ரன் பாலசிங்கம் உடனிருந்தார்.

சொற்ப நேர மௌனத்தைக் கலைத்தபடி, பிரதமர் ராஜீவ் காந்தி பேசத் தொடங்கினார். தான் வரைநத இந்திய - இலங்கை ஒப்பந்தத்தைப் பற்றி ஒரு மேலோட்டமான விளக்கத்தை அளித்துவிட்டு, '' இந்த ஒப்பந்தம் தொடர்பாக உங்களுக்கு ஏதாவது ஆட்சேபனை இருந்தால் அதை எனக்கு விளக்குங்கள்'' என்று தலைவரிடம் கேட்டார்.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் இருந்த முக்கியமான குறைபாடுகள் பற்றித் தனது கருத்தை, தலைவர் அவர்கள் கூறத் தொடங்கினார்.

முதலில், ''தமிழரின் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக முன்வைக்கப்பட்ட மாகாண சபைத் திட்டம் ஒரு முழுமையான சுயாட்சித் திட்டமாக இருக்கவில்லை. அதாவது, உருப்படியான சுயாட்சி அதிகாரங்கள் அதனிடம் இல்லை'' என்று எடுத்துக்கூறினார். மேலும், '' இந்த மாகாணசபை முறையில், சிங்கள மத்திய அரசிற்கே அதி கூடிய அதிகாரங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. அத்துடன், நினைத்த உடனேயே இந்த மாகாண சபையைக் கலைத்துவிடும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு '' என மாகாண சபையின் கையாலாகாத்தனத்தை ராஜீவ் காந்திக்கு எடுத்து விளக்கினார். அத்துடன், '' இந்த ஒப்பந்தம் தமிழரின் தாயகத்தை எற்றுக்கொள்ளவில்லை. வடக்கு - கிழக்கு இணைப்பென்பது தற்காலிகமானதாகவே இருக்கின்றது. நிரந்தர இணைப்பு தொடர்பாக, கிழக்கில் பொதுசன அபிப்பிராய வாக்கெடுப்பு நடாத்தப்படும் என்ற நிலைப்பாட்டை நாம் ஏற்கமாட்டோம் ஏனெனில், வடக்கு - கிழக்கு என்பது பிரிக்க முடியாத தமிழர் தாயகமாகும். எனவே, இணைப்பு - பிரிப்பு - அதற்கான தேர்தல் என்ற ஒப்பந்த விதிகளை நாம் ஏற்றுக்கொள்ளமாட்டோம் '' என்று தலைவர் ஆணித்தரமாக எடுத்துக்கூறினார். அத்துடன், '' எமது மக்களின் அரசியல் வாழ்வைத் தீர்மானிக்கும் ஒரு அரசியல் ஒப்பந்தத்தை எமது மக்களுடன் கலந்தாலோசிக்காது செய்துவிட்டு, அதை நடைமுறைப்படுத்துவதற்கு வசதியாக, 72 மணிநேரத்தில் புலிகள் ஆயுதங்கள் ஒப்படைக்க வேண்டும் என்று கோருவதை நாம் எற்றுக் கொள்ளமாட்டோம் ''

என ,ஒப்பந்தம் தொடர்பான அபிப்பிராயத்தைத் தலைவர் அவர்கள் எடுத்து விளக்கினார்.

தலைவரின் விளக்கத்தை அவதானித்துவிட்டு ராஜீவ், ''வடக்கு - கிழக்கை இணைப்பதற்காக கிழக்கில் அபிப்பிராய வாக்கெடுப்பு என்ற விடயத்தை நாம் எப்படியும், பின்னர் நீக்கப்பார்க்கின்றோம். அதேபோல அதிக அதிகாரங்களை மாகாணசபைக்குப் பெற்றுக்கொடுக்க, பின்னர் முயற்சிக்கின்றோம். ஆனால் இப்போது, இந்த ஒப்பந்தத்தை நீங்கள் ஏற்றுக்கொள்ள முன்வர வேண்டும் என்று நாங்கள் விரும்புகின்றோம்'' என்று தலைவரிடம் வேண்டுகோள் விடுத்தார். திரு.ராஜீவ் காந்தியின் வாய்மொழி உத்தரவாதத்தை எப்படி நம்புவது எனத் தலைவர் சிந்தித்தார்.

'எழுத்தில் உள்ள ஒரு ஒப்பந்தத்தை ஏற்கின்றோம் என்று புலிகள் கையெழுத்திட்ட பின்னர், எழுதப்பட்டதற்கு முரணாக அதை நடைமுறைப்படுத்தும்படி சிறீலங்கா அரசைக் கோர ராஜீவ் காந்திக்கு அதிகாரம் இல்லையே! அவ்வாறு அவர் கோரிக்கை விடுத்தாலும் எழுதப்பட்டதற்கு மேலாக தமிழர்களுக்கு அதிகளவு உரிமை கொடுக்க, பேரினவாதி ஜே.ஆர் ஜெயவர்த்தனா உடன்படுவாரா?'

இந்தியப் பிரதமருக்கு, வெளிப்படையாகவே தலைவர்சொன்னார்: ''முக்கியமான பல குறைபாடுகளைக்கொண்ட இந்த ஒப்பந்தத்தை எம்மால் ஏற்க முடியாது'' என்றார். தலைவர் தனது முடிவை மாற்றி ஒப்பந்தத்தை ஏற்கவேண்டும் என்று, ராஜீவ் காந்தி விடாப்பிடியாக வேண்டுகோள் விடுத்துக்கொண்டிருந்தார். இந்தியப் பிரதமரின் வேண்டுகோளைத் தலைவர் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று, அங்கிருந்த பண்ருட்டி இராமச்சந்திரனும் கேட்டுக்கொண்டார்.

இந்தியப் பிரதமர் எவ்வளவோ சொல்லியும், ஒப்பந்தத்தை ஏற்க முடியாது என்ற நிலைப்பாட்டிலிருந்து தலைவர் கீழிறங்கி வரவில்லை. இந்த நிலையில், தலைவரிடம் வேறொரு வேண்டுகோளை ராஜீவ் விடுத்தார். ''நீங்கள் (தலைவர்) கூறுவதுபோல ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ளத் தேவையில்லை; ஆனால் அதற்கு எதிராகச் செயற்படாமல் விடுவீர்களானால், உங்களுக்குச் சில நன்மைகளை நாங்கள் செய்வோம்'' என்றார்.

அதாவது, வடக்கு - கிழக்கில் ஒரு இடைக்கால அரசை உருவாக்கி, அதன் நிருவாகப் பொறுப்பைப் புலிகளிடம் ஒப்படைப்பது. அடுத்தது,புலிகள் இயக்கம் ஆயுதங்களை முழுமையாக ஒப்படைக்கத் தேவையில்லை; சம்பிரதாயத்திற்காக ஒருதொகை ஆயுதங்களை ஒப்படைத்தால் போதும். அத்துடன், புலிகள் இயக்கத்தின் செலவுகளுக்காக மாதாந்தம் 50 இலட்சம் ரூபாவை (இந்திய ரூபா) இந்திய அரசு வழங்கும் என்று ராஜீவ் காந்தி உறுதி கூறிவிட்டு, இதையாவது ஏற்றுக்கொள்ளும்படி வேண்டினார்.

ஆனாலும் ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்வதில்லை என்ற நிலைப்பாட்டிலிருந்து தலைவர் மாறவே இல்லை. ஆயினும், ''இந்த ஒப்பந்தத்தை அமுலாக்கிப் பார்ப்பதற்கு நாங்கள் எதிர்ப்புத் தெரிவிக்காது இருக்கின்றோம்; நீங்கள் முயற்சித்துப்பாருங்கள். ஆயினும் எமது மக்களின் நலன்களைப் பாதிக்காதவரை நாங்கள் ஒப்பந்த அமுலாக்கலுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கமாட்டோம்'' எனத் தலைவர் ராஜீவ் காந்திக்குத் தெரிவித்தார்.


பின்னர் விடயங்கள் மிகவேகமாக நடந்தன. தொலைபேசியைப் பயன்படுத்தக்கூடாது, வெளியாருடன் தொடர்புகொள்ளக்கூடாது என்று புலிகளிற்கு விதித்திருந்த தடைகள் நீக்கப்பட்டன. இதேவேளை, இரண்டொரு நாளில் கொழும்புக்குப் பறந்த ராஜீவ் காந்தி, அங்கே ஜே. ஆருடன் இணைந்து ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டு, மீண்டும் இந்தியா திரும்பினார். ஓகஸ்ட் 2ஆம் திகதி, மீண்டும் தலைவர் தமிழீழம் வந்தார்.

'சேது அணை தாண்டிய வானரங்கள் போல' இந்தியப் படைகள் தமிழீழத்தில் குவிந்தன.

இந்தியப் பிரதமருக்குக் கொடுத்த வாக்குறுதியின் பிரகாரம், குறித்த தொகை ஆயுதங்களை ஒப்படைத்து, தனது நல்லெண்ணத்தைத் தலைவர் காட்டினார்.

ஆனால், வடக்கு - கிழக்கு இடைக்கால அரசை நிறுவும் விடயத்தில் ஜே. ஆர் இழுத்தடித்தார். அதற்குப் பதிலாக கிழக்கில் சிங்களக் குடியேற்றங்களை முடுக்கிவிட்டார்; புதிய பொலிஸ் நிலையங்களைத் திறந்தார். இது ஒரு புறமிருக்க, மறுபுறத்தில், இந்தியப் பிரதமர் புலிகளின் முதுகில் குத்தத் தொடங்கினார். சமூகவிரோதிகளை மக்களால் அந்நியப்படுத்தப்பட்ட ஆயுதக் குழுக்களை - மீண்டும் தமிழீழத்திற்குக் கூட்டிவந்து, அவர்களுக்கு ஆயுதங்களையும் வழங்கி, புலிகளுக்கு எதிராகத் திருப்பிவிட்டார். தலைவருக்கு வாக்குறுதி அளித்தது போலல்லாது, ஜே ஆரின் அரசுக்குச் சார்பாக ராஜீவ் காந்தி நடக்கத்தொடங்கினார்.

இந்திய அரசின் இரட்டை வேடத்தை அம்பலமாக்க, சாகும்வரை சாத்வீகப் போரைத் தொடுக்கத் திலீபன் முன்வந்தான்; ஆயினும் இந்திய அரசால் திலீபன் சாகடிக்கப்பட்டான். திலீபனின் தியாகச் சாவுடன் விழித்தெழுந்த தமிழ் மக்கள் இந்திய அரசுக்கெதிராகப் போர்க் கொடி தூக்கினர். இந்தவேளையிலேயே எமது தளபதிகளான புலேந்திரன், குமரப்பா உட்பட 12 போராளிகள், இந்திய - சிங்கள சதிக்குப் பலியாகினர். மக்களின் கோபாவேசத்தை வெளியுலகிற்குத் தெரியவிடாமல் தடுக்க நிதர்சனம், ஈழமுரசு போன்ற தொடர்பு சாதனங்களை இந்தியப் படைகள் நாசம் செய்தன. அத்துடன் இந்திய - புலிகள் போரும் தொடங்கியது.



இந்திய - இலங்கை ஒப்பந்தமானது இந்த இரண்டு அரசுகளின் நலன்களையும் நிறைவேற்றும் ஒரு வஞ்சக உடன்பாடாகும்.

இந்திய அரசின் பிராந்திய நலனைப் பாதுகாக்க இலங்கை அரசு உடன்பட வேண்டுமாயின், இலங்கை அரசின் நலனுக்கு ஆபத்தை விளைவிக்கும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை அழிக்க இந்திய அரசு உதவவேண்டும். இதுதான், ராஜீவுக்கும் - ஜே. ஆருக்கும் இடையில் நடந்த எழுதப்படாத உடன்பாடு.

தனது நலனைப் பேணுவதற்காக தமிழ் மக்களது நலனை வேள்விக்கிடாய் ஆக்கி, சிங்களப் பேரினவாதப் பூதத்திற்குக் காணிக்கையாக்க இந்தியா முயன்றது.

இந்த நோக்கத்துடன் தலைவரைக் கொல்வதற்காக ஒரு 'விசேட கொமாண்டோ அணியை' ராஜீவ் காந்தி யாழ்ப்பாணத்திற்கு அனுப்பிவைத்தார். அதன்மூலம் தமிழீழ விடுதலைப் போராட்டத்தைக் கொன்று, தனது ஒப்பந்த பங்குதாரரைத் திருப்திப்படுத்த ராஜீவ் காந்தி முயன்றார்.

போர் விஸ்வரூபம் எடுத்தது. இந்தியப் படைகளால் பெரும் எண்ணிக்கையில் பொது மக்கள் கொல்லப்பட்டனர். இந்தப் போரைத் தடுத்து நிறுத்தி, சமாதான வழியில் பிரச்சினைகளைத் தீர்க்க உதவுவதற்காக, ஒரு போர் நிறுத்தத்தைக் கொண்டுவருமாறு, இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கு கடிதங்கள் மூலமாகத் தலைவர் வேண்டுகோள் விடுத்தார். தலைவரின் கடிதங்களை ராஜீவ் காந்தி பொருட்படுத்தவேயில்லை.

தமிழ்நாட்டில் அப்போது தங்கியிருந்த எமது மூத்த உறுப்பினர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தினைச் சேர்ந்த முரசொலி மாறனை ராஜீவ் காந்தியிடம் தூது அனுப்பி, போரை நிறுத்தும்படி வேண்டினர். பிரதமர் அலுவலகத்தில் வைத்து தன்னைச் சந்தித்த முரசொலி மாறனிடம் ராஜீவ் சொன்னார்: ''பிரபாகரன் என்னுடைய காலடியில் வந்து வீழும்வரை போரை நிறுத்தமாட்டேன்.'' ராஜீவ் காந்தியின் எச்சரிக்கையைக் கேட்டுவிட்டு தி. மு. க. தலைவர் திரு. கருணாநிதி கூறினார் .. ''ஏன் இந்தியப் படையுடன் சண்டையிடுகின்றீர்கள்? பூண்டோடு அழிந்துவிடப்போகின்றீர்கள். உடனேயே ஆயுதங்களுடன் சரணடைந்து உங்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்'' என்று''அறிவுரை'' கூறினார்.

தலைவர் பிரபாகரனைக் கொன்று போரை வென்றுவிட்ட ஒரு வெற்றிச் செய்திக்காக, நேருவின் பேரன் டில்லியில் தவங்கிடந்தார்; ஆனால், அவர் விரும்பிய செய்தி அவரைச் சென்றடையவேயில்லை!

மிரட்டல் இராஜதந்திரத்தைக் கையாண்டு பார்த்த டிக்சிற் அவர்கள், தலைவர் பிரபாகரனைத் தனது வலைக்குள் வீழ்த்த முயன்று தோற்றார். அதனால் கோபமடைந்த டிக்சிற், வார்த்தைக் குண்டுகளை அள்ளி வீசினார்; அது எந்த நன்மையையும் டிக்சிற்றுக்குப் பெற்றுக் கொடுக்கவில்லை.

அரவணைக்கும் இராஜதந்திரத்தைக் கையாண்டுபார்த்து, தலைவர் பிரபாகரனைத் தனது வலைக்குள் வீழ்த்த முயன்று ராஜீவ் காந்தியும் தோற்றார்.

அதனால் கோபமடைந்த ராஜீவ் காந்தி, தலைவரைக் குறிவைத்து இந்தியப் படைகளை ஏவிவிட்டார். தீமையைத் தவிர அது எந்த நன்மையையும் ராஜீவ் காந்திக்குப் பெற்றுக் கொடுக்கவில்லை! ○

## இலக்குப் பிசகாத ஏவுகணைகள்...



இவர்களின் உடல் என்ன
பிளாஸ்ரிக் 'C - 4' ஆ? - அல்லது
'பென்ரலைற்' சக்கை'யா?
இல்லையே... ..

இவர்களின் நாடி நரம்புகள்
என்ன 'கோடெக்ஸ்' வயரா?
அல்லது கொளுத்தும் திரிகளா?
இல்லையே......

ஆனால்
இலக்குப் பிசகாத ஏவுகணைகள்!

கணப் பொழுதுக்குள்
காற்றாகிப் போகும்
உயர் சக்தி வெடிமருந்தின்
ஒரு புதிய வகை......

உணர்வும் உறுதியும் இவர்களுக்கு
உருக்கிரும்பாலே ஊற்றப்பட்டதல்ல

தேசத்தின் வேதனை கண்டு
மனம் பொறுக்காது பிறந்தவையே ...

வாழ வழியின்றி எம்மினம்
வதைந்த நிலைகண்டு - தம்
எலும்பும் தசையுமே
ஈயக்குண்டாய் எதிரியை அழிக்க

தடமின்றி தம்மையே அழிக்கும்
நற் கொடை!

– கு. அறிவுக்குமரன்

# இந்திய அரசியல் : புதிய அத்தியாயம்

அடுத்த வருட முற்பகுதியில் நடைபெறப் போகும் இந்திய'லோக்சபா'விற்கான பொதுத் தேர்தலைத் தொடர்ந்து - இந்திய அரசியல் வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயம் தோன்றலாம் என, உபகண்ட அரசியல் விமர்சகர்கள் ஆரூடம் கூறியுள்ளனர். ஏதாவது ஒரு கட்சி தேர்தலில் அமோக வெற்றிபெற்று அரசை அமைக்கும் வழமை அற்றுப்போய், பல கட்சிகள் சேர்ந்து ஒரு கூட்டரசாங்கம்ஆட்சியைக்கொண்டு நடாத்தும் முறை ஆரம்பமாகலாம் என்பதே அந்த ஆரூடமாகும். இந்த ஆரூடத்திற்குப் பிரதான காரணம், இந்தியாவின் பிரதான தேசியக் கட்சியான கொங்கிரஸ் கட்சியின் எழும்ப முடியாத வீழ்ச்சியும் மற்றும் பாரதிய ஜனதாக் கட்சி உட்பட ஏனைய தேசியக் கட்சிகளின் எழுச்சியின்மையும் ஆகும்.

இதேவேளை, இந்தத் தேசியக் கட்சிகளுக்கு தேசிய ஆளுமைகொண்ட தலைவர்கள் இல்லாமையால் தேசம்தழுவிய தேர்தல் வெற்றியை இவற்றில் எந்தவொரு கட்சியும் பெறமாட்டாது என்பதும், இந்தப் புதிய போக்கிற்கு ஒரு காரணியாக அமையும். இவை ஒருபுறமிருக்க, தேசிய ஆளுமைமிக்க தலைவர்களை இந்தக் கட்சிகள் கொண்டிராதுவிட்டாலுங்கூட, சராசரி இந்தியனின் சமூக வாழ்வை முன்னேற்றிவிடக்கூடிய நல்ல அரசியல் கொள்கைத் திட்டங்களோ அல்லது பொருளாதார முன்னேற்றத் திட்டங்களோ அவற்றிடம் இல்லை. அத்துடன், தேசியக் கட்சிகள் என்று அவை அழைக்கப்பட்டாலுங் கூட, பிராந்தியவாதக் கண்ணோட்டங்களையும் மதவெறிக் கருத்துக்களையும் சாதிவாரிப் பார்வைகளையும் கருத்தில் எடுத்தபடிதான். இந்தக் கட்சிகளின் தலைமைகள் அரசியல் நடாத்த முனைகின்றன. இதேவேளை ஆட்சியியல் என்ற போர்வையில் அரசியல்வாதிகள புரியும் அதிகாரத் துஷ்பிரயோகங்களும் - ஊழல்களும் - தன்னல நடவடிக்கைகளும் - பதவிக்கான குத்துவெட்டுக்களும் இந்திய மக்களைச் சலிப்புறச் செய்துள்ளன; இவற்றால் யதார்த்தம் பற்றிய விழிப்புணர்வு இப்போது அவர்களிடம் அதிகரித்துள்ளது.

இந்திய வாக்காளர்களிடம் தோன்றியுள்ள இத்தகைய விழிப்பு நிலைக்கு வடிகால் அமைப்பதுபோல, மாநிலவாரியாக ஆளுமைகொண்ட தலைவர்கள், ஆங்காங்கே உருவாகத் தொடங்கியுள்ளனர்; அல்லது 'இந்தியத் தேசியம்' என்ற பொய்மைத் திரை விலகிவருவதால் தோன்றிவரும் மாநிலவாரியான தேசியவாதங்களும், இந்திய அரசியலில் ஏற்படப்போகும் அந்தப் புதிய போக்கிற்கு உற்சாகமூட்டுவனவாகவே இருக்கின்றன.

பெரும்பான்மைப் பலங்கொண்ட தனிக்கட்சி அரசாங்கம் என்ற நிலைக்குப் பதிலாக பலகட்சிகள் கொண்ட கூட்டரசாங்கம் என்ற நிலைப்பாடு, இந்தியாவிற்கு ஒரு உறுதியான ஆட்சியைக் கொடுக்கமாட்டாது என்று எதிர்பார்க்கலாம். கூட்டரசாங்கத்திலுள்ள ஏதாவது ஒரு கட்சி திருப்திப்படுத்தப்படாது விடப்படும்போது ஆட்சியே கவிழும் அபாய நிலை, எந்த நேரமும் எழலாம். இதுகாரணமாக, தேசம் தழுவிய முக்கிய முடிவுகளையோ அல்லது அயல்நாடுகள் தொடர்பான ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளையோ அல்லது ஆத்திரமூட்டும் செயற்பாடுகளையோ எழுந்தமானமாக மத்திய அரசால் செய்யமுடியாது போகலாம்; இதன் காரணமாக, தென்னாசியப் பிராந்தியத்தின் சிறிய நாடுகள் அச்சமின்றி வாழும் நிலை ஒன்று எழலாம். அந்தவகையில் அதை ஒரு நல்ல மாற்றம் என்றே கூறலாம்.

இதேவேளை, இந்திய வாக்காளர்களது வாக்களிக்கும் மனநிலையை ஆய்வு செய்து பார்த்தால், சட்டசபைத் தேர்தல்களின்போது மாநிலவாரியான ஒரு கட்சியையும், 'லோக்சபா' தேர்தல்களின்போது தேசியக் கட்சி ஒன்றையும் தெரிவுசெய்யும் விந்தையைக் காணமுடியும்' இந்த மனப்போக்கிற்கு, மாநிலவாரியான கட்சிகளும் இதுவரை உற்சாகமளித்து வந்தன. ஆனால் இதே மனப்போக்கை இனிவரும் தேர்தல்களிலும் எதிர்பார்க்கமுடியாத அளவிற்கு, இந்திய அரசியல் களத்தில் விரைவான பல மாற்றங்கள் நடைபெறத் தொடங்கிவிட்டன.

இனிவரும் காலங்களில், மத்தியில் ஒரு கூட்டரசு அமையும் என்ற நம்பிக்கையே எங்கும் விரவிக் கிடக்கின்றது. இதனால் மத்திய அரசிடமிருந்து காரியங்களைச் சாதிப்பதற்கு - முன்னரைவிட - மாநில அரசுகளுக்கு ஒரு அதிகார பேர பலம் தேவை. அதாவது கூட்டரசுடன் பேரம் பேசுவதற்கான துருப்புச்சீட்டாக 'லோக்சபா' உறுப்பினர்களை வைத்திருக்க எல்லா மாநிலக் கட்சிகளும் விரும்பும். எனவே, இதுவரை காலமும் செய்ததுபோல, தேசியக் கட்சி ஒன்றிற்கு தனது மாநிலத்திலுள்ள 'லோக்சபா' தொகுதியைத் தாரைவார்த்துக் கொடுக்க மாநிலவாரியான ஆளும் கட்சிகள் விரும்பமாட்டா. இந்த நிலை, ஒரு தொங்கு நாடாளுமன்றத்தை மத்தியில் ஏற்படுத்தும்.

இத்தகைய ஒரு அரசியல் போக்கு மாநிலவாரியான தேசியவாதத்தை நிச்சயம் வளர்த்துவிடும்; அத்துடன் இந்திய உபகண்டத்தில் தேசிய விடுதலைக் குமுறல்களையும் ஊக்குவித்துவிடும். எதுஎப்படியோ, புதிய நூற்றாண்டின் ஆரம்பமே இந்திய ஆளும் வர்க்கத்துக்குத் தலைவலி நிறைந்த காலமாக இருக்கப்போகின்றது! ○

# போராட்டம் - ஒவ்வொரு...

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

செலுத்தாது விட்டுவிடுகின்றனர் என்று மனோதத்துவரீதியிலான ஒரு விளக்கத்தைக் கொடுத்தும் எம்மீது குற்றம் சுமத்த முயல்கின்றனர். போர்விமானங்களின் இரைச்சல்களையும், குண்டுச் சத்தங்களையும் அன்றாடம் கேட்டபடி - படுகொலைச் சம்பவங்களையும் இராணுவ வெறியாட்டச் செய்திகளையும் நாள்தோறும் அறிந்தபடி - அதற்குள் தமது பள்ளிப் படிப்பைத் தொடரும் எமது மாணவர்களுக்கு, போர்க்கால கருத்துரைகள் பாதிப்பை ஏற்படுத்துகின்றன என்ற குற்றச்சாட்டை எவருமே ஏற்கமாட்டார்கள். தேவையானால் ஒரு விடயத்தை ஒப்புக்கொள்ளலாம். அதாவது, எமது கருத்துரைகளால் தெளிவடைந்து - யதார்த்த உலகைக் காணும் ஒரு மாணவன் அல்லது ஒரு மாணவி, தான் தேசத்திற்குச் செய்யவேண்டிய கடமை பற்றிச் சிந்திக்கும்போது, அந்த சிந்தனை அந்த மாணவரது மனதில் ஒரு தாக்கத்தை விளைவிக்கின்றது என்று ஏற்றுக்கொள்ளலாம். ஆனாலும் அந்த உயர்ந்த சிந்தனை அந்தமாணவரது கல்வியைக் குழப்புகின்றது என்று - குறுகிய வட்டத்திற்குள் வைத்துப்பார்த்து - தீர்ப்புக்கூற முடியாது.

எனவே, பாடசாலைகளிலோ அல்லது தனியார் கல்வி நிலையங்களிலோ 'போர்க்கால கருத்தரங்குகள்' நடாத்துவதைப் பலர் விமர்சிப்பதற்குக் காரணம், மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுகின்றது என்பதனால் அல்ல: மாறாக, எமது இளம் சமூகமானது சுதந்திரமாக ஒன்றுகூடி - தலையீடுகளின்றிச் சிந்தித்து முடிவெடுக்கக்கூடிய இத்தகைய இடங்களில், அந்த இளம் சமூகத்தை புலிவீரர்கள் சந்தித்துக் கருத்துரைகள் வழங்கி, போராட்டப் பாதையில் அவர்களை இணைத்துக்கொள்ள முயல்கின்றார்கள் என்பதனாலேயே ஆகும்.

இதேவேளை, போரால் ஏற்பட்ட உயிரிழப்புக்களையும் - பொருள் அழிவுகளையும் - கல்வி, பொருளாதாரத் துறைகளில் ஏற்பட்டுள்ள பின்னடைவுகளையும் சுட்டிக்காட்டும் சிலர், இதற்கெல்லாம் காரணம் இந்த விடுதலைப் போராட்டம்தான் என்று குற்றம் சுமத்தி - கொச்சைப்படுத்த முயல்கின்ற தன்மையையும் அவதானிக்கக்கூடியதாக உள்ளது. அத்துடன், இத்தகைய மனித அழிவுகளையும் - பொருளாதாரக் கல்விப் பின்னடைவுகளையும் கொண்ட தமிழீழம் தேவையா என்று, இடக்குத்தனமான கேள்வியையும் சிலர் எழுப்ப விரும்புகின்றனர்.

போர் என்பது உயிர் அழிவுகளையும் - பொருளாதார நாசங்களையும் கொண்டுவருகின்றது என்பது உண்மைதான். ஆயினும் அழிவுகளுக்குப் பயந்து ஒரு தேசம் அல்லது ஒரு தேசிய இனம், தன்மீதான ஆக்கிரமிப்பைச் சகித்துக் கொண்டிருக்க முடியாது; அவ்விதம் சகித்துக்கொண்டு வாழ வேண்டும் என்று கூறுபவர்கள், ஆக்கிரமிப்புவாதிகளின் அடிவருடிகளாகவே இருப்பர்; அல்லது இனப்பற்று - சமூகப்பற்று அற்ற வெறும் உதிரிகளாகவே இருப்பர்.

இதேவேளை, உலகின் பல விடுதலைப் போராட்டங்களுடன் ஒப்பிடும்போது, எமது மண்ணில் ஏற்பட்டுள்ள உயிர்ச்சேதம் என்பது மிகக்குறைவு. வியட்னாம் விடுதலைப் போரிலும் - எரித்திரிய விடுதலைப் போரிலும் பல இலட்சம் மக்கள் பலியாகியுள்ளனர். சில விடுதலைப் போராட்டங்களில் பல்லாயிரம் மக்கள் பலியாகியிருந்தாலும், போராட்டம் வளர்ச்சியடையாது பின்னடைந்து கிடப்பதையும் காணக்கூடியதாக உள்ளது. ஆனால், எமது போராட்டம் அவ்வாறானதொன்று அல்ல.

ஆறு வருடங்களே நடந்த இரண்டாம் உலகப் போரில், சோவியத் யூனியன் தனது மக்களில் இரண்டரைக்கோடிப் பேரை இழந்தது. இதேபோல அந்த உலகப்போரில் இலண்டன் நகர்மீது ஜேர்மனிய விமானங்கள் நடாத்திய தொடர் விமானத் தாக்குதலில், ஒருநாள் மட்டும், ஆயிரத்து இருநூறுபேர் மாண்டனர்; அத்துடன் ஒவ்வொரு இரவும் நடந்த கண்மூடித்தனமான விமானக் குண்டுவீச்சில், நாளொன்றுக்கு நூற்றுக்கும் மேற்பட்டோர் என்ற வீதத்தில் பொது மக்கள் பலியாகியதுடன், இலண்டன் மாநகர் கற்குவியலாகவும் மாறியது. இந்தவகையில் சோவியத் யூனியன், பிரிட்டன் என்பவற்றைப்போல - யப்பான், சீனா, கொரியா, ஜேர்மனி மற்றும் பல நாடுகள் இரண்டாம் உலகப் போரில் சந்தித்த உயிர் - பொருள் இழப்புகளுக்கு அப்பால், இன்று அடைந்துள்ள பாரிய பொருளாதார முன்னேற்றத்தை நாம் மறுக்க முடியாது. இந்தத் தகவல்களின் மூலம், போர்செய்து அழிவுகளைச் சந்தித்தால்தான் ஒரு தேசம் முன்னேற்றமடையலாம் என்ற கருத்தை நாம் கூற வரவில்லை. மாறாக, போர் என்பது ஒரு தேசத்தின் எதிர்காலத்தை இருள்நிறைந்ததாக்கிவிடும் என்று பயமுறுத்துபவரின் கூற்றை மறுக்கவே, மேற்குறித்த உதாரணங்களைக் காட்டியுள்ளோம்.

தமிழினத்தைப் பொறுத்தவரை, தற்போதைய போர் இன அழிப்பிற்கு எதிரான ஒரு தற்காப்புப் போர் ஆகும்; என்ன விலை கொடுத்தேனும் இந்தத் தற்காப்புப் போரை நாம் நடத்தியே ஆக வேண்டியுள்ளது. நாம் போரிலும் வெற்றிகளைக் குவித்தபடியே இருக்கின்றோம். ஆயினும் போரில் ஏற்படும் உயிரிழப்புக்களும் - அதனால் ஏற்படும் மானுட அவலங்களும் ஈடுசெய்யப்பட முடியாதவைதான். ஆயினும் பொருளாதார, கல்வி இழப்புக்கள் என்பவை ஈடுசெய்யப்படக்கூடியவையே ஆகும். திறமையான தலைமைத்துவத்துடன்கூடிய தேசாபிமானங்கொண்ட ஒரு அரசு, இந்தப் பொருள் இழப்புக்களைத் துரிதகதியில் ஈடுசெய்துவிடும். யப்பானிலும், சீனாவிலும், ஜேர்மனியிலும், இங்கிலாந்திலும் இதுதான் நடந்துள்ளது.

எனவே, முதலில் எமது படைத்துறை ஆட்பலத்தை அதிகரித்து, போரை விரைவாக வெல்ல முயலுவோம். போரை வென்றால், தென் ஆசியாவின் சிறப்புமிக்க தேசமாக தமிழீழம் அமையும்; இது உறுதி! ○

# களநிலைமை எப்படி உள்ளது?

'மூன்றாம் ஈழப்போரின்' மையம் தென்தமிழீழப் போர் முனையிலேயே இதுவரை நிலை கொண்டிருக்கின்றது. அங்கே, தொடர்ச்சியாகவும் - தாக்கத்தை ஏற்படுத்தும் வகையிலும் புலிவீரர்கள் தொடுக்கும் தாக்குதல்களால், சிங்களப் படை பலத்த பின்னடைவுகளைச் சந்தித்துவருகின்றது. இராணுவரீதியாக அது சந்திக்கும் உயிர் மற்றும் ஆயுத இழப்பு என்பவற்றைவிட, தென் தமிழீழத்தில் நிலைகொண்டுள்ள படையினரின் போரிடும் உறுதியைச் சிதைக்கும் வகையில், புலிவீரர்களின் இராணுவ நடவடிக்கைகள் அமைந்து வருகின்றன என்பதே பெரிய விடயமாகும். பொலிசார் கடமைக்கு வராதுவிடுவதும் - தாக்குதல் நடைபெறும்போது படையினர், களத்தைவிட்டுத் தப்பி ஓடி உயிரைப் பாதுகாக்க முனைவதும் - போரிடும் உறுதியில் ஏற்பட்ட வீழ்ச்சியின் எதிர்விளைவுகளே ஆகும். அதேவேளை, புலிகளின் தாக்குதல் தீவிரத்தால், சில முகாங்களை அகற்றவேண்டிய நிலைக்கும் படைத்துறைத் தலைமை தள்ளப்பட்டுள்ளது; இதனால், தென்தமிழீழம் மீது சிங்களப் படைகள் வைத்திருந்த தரைக்கட்டுப்பாட்டிலும் பெருந்தாக்கம் நிகழ்ந்துள்ளது. இது சிங்களப் பேரினவாத சக்திகளை வெருண்டடிக்கச் செய்துள்ளது.


## புதிய'லங்காபுவத்'துக்கள்

இதேவேளை, தமது இராணுவத்தோல்விகளை மறைப்பதற்காக - சிங்கள அரசின் பேச்சாளர்கள் - பொய்ப்பிரச்சாரங்களில் ஈடுபடும் கயமைத்தனத்தையும் காணக்கூடியதாக உள்ளது. அண்மைக்காலமாக - தமிழீழப் போர்முனைகளில் பலியாகும் சிங்களப் படையினரின் எண்ணிக்கையைச் சமப்படுத்திக் காட்டுவதற்காக - பெருமளவு புலிவீரர்கள் உயிரிழந்துள்ளதாக அரசு பொய்ப் பிரச்சாரம் செய்கின்றது; இந்த மிகைப்படுத்தப்பட்ட பிரச்சாரத்தை சில கொழும்பு விமர்சகர்கள் கண்டித்துமுள்ளனர். இவ்வாறு போர் முனைச் செய்திகளில் பெரிய பொய்களைக் கலக்கத்தொடங்கினால், அது அரசு வெளியிடும் செய்திகளின் நம்பகத்தன்மையைப் பெரிதும் குறைத்துவிடும்; அது அரசுக்குக் கூடாது என, சில அரசியல் விமர்சகர்கள் சந்திரிகா அரசுக்கு ஆலோசனை கூறுகின்றனர். இவ்வாறுதான், திருவாளர் லலித் அத்துலத் முதலியின் காலத்தில், லங்காபுவத் என்ற பெயரிலான அரசின் செய்தித்தாபனம் வெளியிட்ட பொய்த்தகவல்களால் அது மக்கள் மத்தியில் பரிகாசத்திற்குரிய ஒன்றாக மாறியிருந்தது. 'புளுகு என்றால் லங்காபுவத்' என்று கருதும் அளவுக்கு, லங்காபுவத் செய்தித்தாபனம் நடந்துகொண்டது. அதேபோன்றுதான் இராணுவப் பேச்சாளர், அமைச்சரவைப் பேச்சாளர் என்ற பெயர்களில் சந்திரிகா அரசும் பல 'லங்காபுவத்'துக்களை உருவாக்கிவருகின்றது!

வடதமிழீழம் மீதான பாரிய படைஎடுப்பைப் பற்றிய பேச்சுக்கள் இப்போது தீவிரமடைந்துள்ளன. யூலை மாத பிற்பகுதியில் அல்லது ஓகஸ்ட் மாத முற்பகுதியில் அவ்வாறானதொரு பாரிய படையெடுப்பை அரசுப் படைகள் செய்யப்போவதாக, கொழும்புப் பத்திரிகைகள் ஆதாரங்கள் பலவற்றைக் காட்டிச் செய்தி வெளியிட்டுக்கொண்டிருக்கின்றன. ஒரு வருடத்திற்குள் போரை வெல்லப்போவதாக, பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்த அறிக்கை வெளியிட்டுமுள்ளார். அனைத்துலக நாடுகளிலுள்ள புலிகளின் அலுவலகங்களை மூடச் செய்து - தமிழ் மக்களின் குரலை அமுக்கிவிட்டு, வடதமிழீழம் மீது பாரிய படையெடுப்பொன்றை மேற்கொள்வதே சந்திரிகா அரசின் திட்டமாக இருந்தது. ஆனால், அரசின் அந்தத் திட்டம் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து, சந்திரிகா அம்மையார் குழம்பிய நிலையிலேயே உள்ளார். திட்டமிட்டபடி வடதமிழீழம் மீது படையெடுப்பை மேற்கொள்வதா? அல்லது கிழக்கிற்குத் துருப்புகளை அனுப்பி கிழக்கைப் பாதுகாப்பதா என்று முடிவெடுக்க முடியாது, சந்திரிகா அரசு திண்டாடுகின்றது.

## படையெடுப்பு நடக்குமா? இல்லையா?

'மூன்றாவது ஈழப்போர்' ஆரம்பமாகிய இந்த இரண்டரை மாத போர் நிலைமையை ஆராய்ந்து பார்த்தால், அது சிங்களப் படைக்குப் பாதகமாக இருக்கின்ற உண்மையைக் காணமுடியும். வான், கடல், தரை என்று மூன்று போர் முனைகளிலும் சிங்களப் படை பலத்த இழப்புகளைச் சந்தித்துவிட்டது. இந்த நிலையில் ஒரு பாரிய படைநடாத்துகையைச் செய்யும் துணிவு அரசுப் படைகளுக்கு உண்டா என்பது,ஒரு கேள்வியாகும். ஆயினும், சரியோ பிழையோ, அவ்வாறானதொரு படையெடுப்பைச் செய்யவேண்டிய தேவை சந்திரிகா அரசுக்கு இப்போது எழுந்துள்ளது. ஏனெனில், எதிர்வரும் யூலை 15 இற்கு முன்பாக, சர்வ அதிகாரம் படைத்த ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிப்பதாக சந்திரிகா அம்மையார் தேர்தல் வாக்குறுதி கொடுத்துள்ளார்; அவ்விதம் செய்யாதுவிட்டால், அரசுக்கு எதிரான போராட்டங்களை நடாத்தப் போவதாக, பல்வேறு கட்சிகளும் அமைப்புக்களும் அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளன. ஆயினும், ஜனாதிபதி முறைமையை நீக்கினால் சந்திரிகா அரசின் ஆயுள் கேள்விக்குரியதாக மாறிவிடும். அந்தளவுக்கு பொதுசன முன்னணியின் நாடாளுமன்றப் பலம் இருக்கின்றது. எனவே தேசியப் பிரச்சினை ஒன்றை உருவாக்கி, அதன் மூலம் மக்களைத் திசைதிருப்பி, ஜனாதிபதி முறைமையை நீடிக்கச் சந்திரிகா அரசு முயல்கின்றது என்பது ஒரு குற்றச்சாட்டு. ஒரு பெரும் படையெடுப்பை வடதமிழீழம் மீது தொடுத்தால், சிங்கள மக்களின் கவனம் போர் மீது சென்றுவிடும்; இதனால் சிறிது காலத்திற்காவது நிம்மதியாக இருக்கலாம் என, சந்திரிகா அம்மையார் எண்ணக்கூடும். எனவே, படையெடுப்பு என்பது நிச்சயமான ஒன்றாகவே இருக்கின்றது. திரு ரத்வத்தையின் ''ஒரு வருடத்தில் முடித்துவிடுவோம்'' என்ற கூற்றும் இதை மெய்ப்பிக்கின்றது. இருந்தபொழுதிலும், அந்தப் படையெடுப்பிற்குப் புலிவீரர்கள் தக்க பதிலடி கொடுத்துச் சிங்களப்படையணிகளுக்குப்பேரிழப்புக்களை ஏற்படுத்துவார்களேயானால், சிங்களப் படைத்துறை எழும்ப முடியாத ஒரு பெருந்தோல்வியைச் சந்திக்கும் என்பது திண்ணம்.




## புலிகளை வெல்ல முடியாது;புலிகளே வெல்லத் தொடங்கியுள்ளனர்!

இதேவேளை, 'புலிகளைப் போரில் தோற்கடிக்கும் சக்தி சிங்கள இராணுவத்திற்கு இல்லை' என்ற கருத்து சிங்கள தேசத்தில் ஆழமாக வேரூன்றுவதையும் அவதானிக்கக்கூடியதாக உள்ளது. சிங்களக் கடற்படையின் பாரிய சண்டைக் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டதும், விமான எதிர்ப்புப் பலத்தைப் புலிகள் இயக்கம் பெற்றுவிட்டது என்ற செய்தியும் மற்றும் தரைச்சண்டைகளில் புலிகள் பெற்றுள்ள இராணுவ மேலாதிக்கமும் ஒன்றுசேர்ந்து, சிங்கள மக்களிடம் இந்தக் கருத்தைத் தோற்றுவித்திருக்கலாம். 'மூன்றாம் ஈழப்போரின்' ஆரம்பத்திலேயே இவ்விதமான ஒரு அவநம்பிக்கைக் கருத்து சிங்கள மக்களது மனதில் விழுந்ததானது, எதிர்காலத்தில் பல பிரச்சினைகளைச் சிங்கள அரசிற்கு ஏற்படுத்தலாம். படைக்கு ஆட்களைத் திரட்டுவதிலிருந்து - குடியேற்றத் திட்டங்களைத் தொடர்வது வரை, சிங்களப் பேரினவாதத்திற்கு பல நெருக்கடிகளை அது கொடுக்கலாம். புலிகளை வெல்லமுடியாது என்ற எண்ணத்தின் காரணமாக, 'வெளிநாட்டுப் படைகளை அழைக்க வேண்டும்' என்பதும், வெளிநாடுகளில் இருந்து இராணுவ ஆலோசனைகளைப் பெறவேண்டும் என்பது பற்றிய கதைகளும் தான் - இப்போது சிங்கள தேசத்தில் வழமையாகிவிட்டன. புலிகளைப் போரில் வெல்லமுடியாது என்பதுடன், புலிகளே போரை வெல்லத் தொடங்கியுள்ளனர் என்ற செய்தி, குடியேற்றத் திட்டங்களிலுள்ள சிங்கள மக்களது காதுகளில் விழுகின்றபோது, அவர்கள் தமது இடங்களைக் காலிசெய்துவிட்டு ஓடுகின்ற போக்கையும் காணக்கூடியதாக உள்ளது.

## மூன்றாம் ஈழப்போரும் குடியேற்றங்களும்

தமிழரின் நிலத்தை ஆக்கிரமித்து அவற்றைச் சிங்கள மயமாக்க வேண்டும் என்ற பேரினவாத சிந்தனையுடன் நடாத்தப்பட்ட சிங்களக் குடியேற்றங்களிலிருந்து சிங்களவர்கள் வெளியேறிச் செல்லாதிருப்பதற்காக, அங்கெல்லாம் இராணுவ முகாம்களை நிறுவி - பாதுகாப்புக் கொடுப்பதாக அரசு நம்பிக்கை ஊட்டிவந்தது. ஆனால் அந்த இராணுவ முகாம்களில் இருக்கும் சிப்பாய்கள், குறித்த குடியேற்றங்களில் பல சமூகச் சீரழிவுகள் ஏற்படக் காரணமாக இருக்கின்றார்கள் என, குடியேற்றவாசிகள் கொழும்புப் பத்திரிகையாளர்களிடம், கோபத்தில் குமுறிஉள்ளனர். இதேவேளை, குடியேற்றப் பகுதிகளிலுள்ள இராணுவ நிலைகள் மீது புலிவீரர்கள் அடிக்கடி வெற்றிகரமான தாக்குதல்களை நிகழ்த்துவதால், பெரும்பாலான சிங்களக் குடியேற்றங்கள் இன்று ஆட்டங்கண்டு போய் உள்ளன.

அங்கிருந்து, பெருந்தொகையான குடியேறிகள் வெளியேறத் தொடங்கி உள்ளனர். தென்தமிழீழப் போர்முனையில் சிங்களப் பேரினவாதம் சந்தித்துள்ள மிகப் பெரிய நெருக்கடியாக, குடியேற்றவாசிகளின் வெளியேற்றத்தையே குறிப்பிடலாம். ஏனெனில், குடியேறிகளின் வெளியேற்றம் என்பதை, சிங்களப் பேரினவாதக் கொள்கைக்குக்கிடைத்துவரும் ஒரு பலத்த அடியாகவே அது கருதும்.

## புலிகளின் படைபல வளர்ச்சி

என்னதான் சிங்களப் பேரினவாதம் போராட்டத்தை அழிக்கப்போவதாகக் கொக்கரித்தாலும், தமிழரின் படைபல வளர்ச்சி படிப்படியாக வளர்ந்து செல்வதையே காணக்கூடியதாக உள்ளது. போர் ஆயுதங்கள் ரீதியாகவும், ஆள் எண்ணிக்கை வடிவத்திலும் புலிகள் இயக்கத்தின் பலம் அதிகரித்தபடியே உள்ளது; இதை மக்களும் அறிவார்கள். ஆயினும், சிங்களப் படைபலப் பெருக்கத்திற்கு இணையாக தமிழரின் படைபலம் அதிகரிக்கவில்லை என்பதும் உண்மையாகும். புலிகள் இயக்கத்தின் ஆள் எண்ணிக்கையில் மிகப் பெரிய அதிகரிப்பை ஏற்படுத்துவதன்மூலமே, இந்த 'படைபல சம நிலையை' தமிழர்கள் எய்தமுடியும்; அவ்விதமான ஒரு வளர்ச்சி ஏற்பட்டால்தான் இறுதிவெற்றி சாத்தியமாகும்! O

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்